சங்கடங்கள் அகற்றி மனச்சாந்தியளிக்கும் மந்திரங்கள்



கே.எஸ். பதஞ்சலி ஐயர்

நர்மதா

ng

உடல் நோய்கள், மனக் கஷ்டங்கள் அகல

சங்கடங்கள் அகற்றி மனச் சாந்தியளிக்கும் மந்திர(சக்கர)ங்கள்

(பூஜை விதி முறைகளுடன்)

தொகுப்பும்—பொழிப்புரையும் :

கே. எஸ். பதஞ்சலி ஐயரவர்கள்

நர்மதா பதிப்பகம்

நல்ல நூல் வெளியீட்டாளர்கள்

16/7, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார்

தியாகராய நகர் - சென்னை-600 017.

வாசித்தீர்களா?

□	உபநிஷதங்களின் சாரம்	8 50
□	பிராணாயாமம் சுகமான சுவாச முறை	13 00
□	இந்து தர்ம சாஸ்திரம்	20 00
□	அம்பாள் அர்ச்சனை 1008	10 00
□	இந்து சமய பண்டிகைகள் வழிபாட்டு முறைகள்	11 00
□	பகவத் கீதை-உரை விளக்கம்	20 00
□	சபரிமலை ஐயப்பன்	22 00
□	அருள் தரும் தமிழக ஆலயங்கள்	30 00

□ □ □

N 426

Price Rs. 14-00

□ Sangadangal Ahatri, Mana Santhialikkum Manthirangal — A Compilation of mantras and Pooja Methods by K. S. Pathanjali Iyer (C) □ First Edition : July 1993 □ Published by : T. S. Raamalingam, Narmadha Pathipagam, Madras—600017 □ Printed at : M/s Guhan Printir works, Madras-600 094. □□

பொருளடக்கம்

மந்திரங்கள் அளிக்கும் மன ஒருமைப்பாடு	5
விநாயகப் பெருமான் உபாசன விதி	12
மூல மந்திரம்	12
நோய்கள் அகல	13
பலவித தோஷங்கள் அகல	13
கணபதி மூல மந்திரம்	14
மற்றவர்களால் ஏற்படும் சங்கடங்கள்	14
விநாயகர் அகவல்	15
சரவண பவன் உபாசனா மந்திரம்	18
,, ,, ,,	19
ஸ்ரீ சண்முக மூல மந்திரம்	19
உபாசனா மந்திர சக்கரம்	19
பிறரை வசியம் செய்ய ஐந்தெழுத்து மந்திரம்	21
வசிய மந்திரம்—1	22
வசிய மந்திரம்—2	23
பகை தவிர்த்து சகல தோஷங்களை விலக்கும் குருபர மந்திரம்	23
கந்தர் சஷ்டி கவசம்	24
வறுமை அகல குறைகள் நீங்க	30
தோஷத்தின் காரணமாக ஏற்படுகிற காய்ச்சல் விலக மந்திரங்கள்	33
அசுவினி நட்சத்திரம்	33
கிருத்திகை நட்சத்திரம்	35
ரோகிணி நட்சத்திரம்	36
மிருகசீரிஷ நட்சத்திரம்	38
திருவாதிரை நட்சத்திரம்	38
புனர்பூச நட்சத்திரம்	40
பூச நட்சத்திரம்	40
ஆயில்ய நட்சத்திரம்	42
மக நடசத்திரம்	42
பூர நட்சத்திரம்	43
உத்திர நட்சத்திரம்	44
அஸ்த நட்சத்திரம்	44
சித்திரை நட்சத்திரம்	45
சுவாதி நட்சத்திரம்	46
விசாக நட்சத்திரம்	47

அனுஷ நட்சத்திரம்	48
கேட்டை நட்சத்திரம்	48
மூல நட்சத்திரம்	49
பூராடம் நட்சத்திரம்	50
உத்திராட நட்சத்திரம்	51
திருவோண நட்சத்திரம்	52
அவிட்ட நட்சத்திரம்	52
பூரட்டாதி நட்சத்திரம்	52
உத்திரட்டாதி நட்சத்திரம்	53
ரேவதி நட்சத்திரம்	53
கட்டிகள் பிளவைகள் உடைந்து குணமாக மந்திரம்	54
தேள் கொட்டிய விஷம் இறங்க மந்திரம்	55
விருப்பம் போல திருமணம் நடைபெற	56
சுளுக்கு அகல மந்திரம்	57
கல்வியில் தேர்ச்சியும் உயர் பட்டங்களும் பெற	58
மூல மந்திரம்	60
பதவி உயர்வுக்கு	60
கடிக்க வரும் நாயின் வாயைக் கட்ட	61
சகல சித்திகளும், சக்திகளும் பெறுவதற்கான மந்திரம்	65
திருட்டை கண்டுபிடிக்கும் மந்திரம்	68
எலிக்கடி விஷம் நீங்க	69
பலவித தோஷங்கள் அகல	70
கடிக்க வரும் பாம்பை தடைக்கட்டுதல்	71
பகைவரின் கட்டை அறுக்கும் மந்திரம்	72
வல்லமைசாலிகளையும் வணங்க வைக்கும் நாற்பது முக்கோண வசிய சக்கரம்	74
மோகினி வசிய சக்கரம்	76
திசை கட்டும் மந்திரம்	78
திருட்டைக் கண்டுபிடிக்கும் கிண்ணி மந்திரம்	79
ஒற்றைத் தலைவலிக்கு	85
பாலக் கிரக தோஷ சாந்தி முறைகள்	85-88
பாம்பு விஷம் இறங்க	90
சிசுக்களுக்கு வேப்பிலை அடிக்க	95
மனோசக்தி வளர்த்துக் கொள்ள	92
பசு பால் கறக்க	93
நினைத்தது நினைத்தவாறு நடக்க	96
மந்திரங்கள் பலிக்குமா?	99

□□□

உ

ஸ்ரீ ரட்சித்த ஐயனார் துணை!

மந்திரங்கள் அளிக்கும் மன ஒருமைப்பாடு!

இறைவன் வழிபாட்டு முறையில் எப்போதுமே மந்திரங்களுக்கு சிறப்பான இடம் உண்டு. சிந்தனைக்கு எட்டாத காலந்தொட்டு இன்று வரை தெய்வங்களை வழிபடுவதற்கு மந்திரங்கள்தான் முறையான—சரியான சாதனம் என மக்கள் நம்பி வந்திருக்கின்றனர்.

தெய்வ நிந்தனையும் சீர்திருத்த பேச்சுக்களும், பகுத்தறிவு பிரச்சாரங்களும் வெகுவாக பெருகி விட்ட இந்த நாட்களிலும் மந்திரங்களுக்கு உள்ள மகிமையும், மதிப்பும் சற்றும் குறைந்ததாகத் தெரியவில்லை.

இந்தக் காலத்தில் ஆலயங்கள் அனைத்திலுமே மந்திரங்களை ஓதி வழிபாடு நடத்தும் வழக்கம் தொடர்ந்து நிலவி வருகிறது.

மந்திரங்களை சொல்லும் வகையில் காலத்துக்கேற்ப சில பல மாறுபாடுகள் ஏற்பட்டு வருகின்றன. பல காலமாக ஆலயங்களில் இறைவனை சமஸ்கிருத மொழி மந்திரங்களைக் கொண்டு ஆராதிக்கும் வழக்கம் சற்று மாறி தமிழ் மொழியில் மந்திரங்களை உச்சரித்து ஆராதனை அர்ச்சனை செய்யும் வழக்கம் வளர்ந்து வருகிறது.

தற்காலத்தில் திருமண நடைமுறைகளில் ஓரளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

வழக்கமாக புரோகித முறையில் அந்தணர் ஒருவரைக் கொண்டு திருமண நிகழ்ச்சிகளை நடப்பித்து வந்தார்கள். திருமணச் சடங்குகளை நடத்தி வைக்கும் அந்தணர் சமஸ் கிருத மொழியில் உள்ள வேத மந்திரங்களை ஆதாரமாகக் கொண்டுதான் திருமண நிகழ்ச்சிகளை நடத்துவார்.

தற்சமயம் திருமண நிகழ்ச்சிகளை தமிழறிஞர் ஒருவர் தமிழ் மந்திரங்களைச் சொல்லி சில இடங்களில் நடத்தி வைக்கிறார். வேறு சில இடங்களில் தெய்வ நம்பிக்கை இல்லாத சிலர் திருமணங்களை புரோகிதரை வைத்தோ தமிழ் அறிஞர்களை கொண்டோ மந்திரங்களை ஓதி திருமண நிகழ்ச்சிகளை நடத்துவதை புறக்கணிக் கின்றனர். இவர்கள் யாராவது ஒரு பிரமுகரை, தமிழறிஞரை முன் வைத்து அவர் மூலமாக திருமணத்தை நடத்தி விடுகிறார்கள். பிரமுகர் தாலியை எடுத்து மண மகன் கையில் கொடுத்து மணமகளுக்கு அணிவிக்குமாறு கேட்டுக் கொள்வார். பிறகு பிரமுகரும், பிறரும் மண மக்களை வாழ்த்தி உரையாற்றுவார்கள்.

இத்தகைய திருமணங்கள் பகுத்தறிவு முறைப்படியாக நடைபெறுவதாகக் கூறப்பட்டாலும் ஓரளவுக்கு திரு மணத்தை நடத்தி வைக்கும் பிரமுகரே ஒரு புரோகிதராகத் தான் செயல்படுகிறார். சமஸ்கிருத மந்திரங்களை அவர் சொல்வதில்லை. ஆனால் தமிழ் மொழியில் மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

இதில் மற்றொரு அம்சம் என்னவென்றால் பகுத்தறிவு முறைப்படி நடத்தும் திருமணத்தில் பழைய வழக்கத்தை ஒட்டி வரும் தாலி கட்டும் வழக்கம் மட்டும் புறக்கணிக்கப் படுவதில்லை. என்னதான் சீர்திருத்தம் பேசினாலும், மணமக்களின் பெற்றோருக்கு தாலியை ஒரேயடியாக புறக் கணிக்கும் துணிச்சல் இன்னும் வரவில்லை. தாலி அணி விக்காமலே ஒரு சிலர் திருமணம் நடத்தி இருந்தாலும் ஏதோ தவறு செய்துவிட்ட மனக் குறுகுறுப்புடன் அவர்கள்

திருமண நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள் என்பதை நாமே கண்டிருக்கிறோம்.

பல இடங்களில் பதிவுத் திருமணம் செய்யும் வழக்கம் அதிகரித்து வருகிறது என்றாலும் அவைகளில் பெரும் பான்மையினர் திருமணத்தை பதிவு செய்து கொண்ட பின்னர் வைதீக முறைப்படி புரோகிதரை வைத்து திருமணம் செய்து விடுகின்றனர்.

எது எப்படி இருந்தாலும் தற்காலத்தில் நடத்தும் திருமணங்களில் தொண்ணூறு விழுக்காடு அளவுக்கு திருமணங்கள் புரோகிதர்களைக் கொண்டு வேத மந்திரங் களை ஓதி நடத்தப் பெறுபவையாகவே இருக்கின்றன.

மந்திரங்களின் மகிமையில் மக்களுக்கு இருக்கும் ஆழ்ந்த மதிப்பும் பற்றும்தான் இதற்குக் காரணம்.

மந்திரங்களுக்கு உண்மையிலேயே ஏதாவது ஆற்றல், அற்புத சக்தி இருக்கின்றனவா என்று இன்றைய 'பகுத் தறிவு வாதிகள்' வினா எழுப்புகிறார்கள்.

அதாவது மந்திரங்கள் குறித்து விஞ்ஞான பூர்வமாக விளக்கம் தர முடியுமா என்பது இவர்கள் எழுப்பும் ஐய வினா.

இந்து மதத் தத்துவங்கள், வழிபாட்டுநெறி முறைகள், மந்திர உபதேசங்கள் ஆகிய அனைத்துமே விஞ்ஞான பூர்வமான பலமான அடிப்படையை கொண்டவையே என் பதை உலகத்தில் பல அறிவியல் அறிஞர்கள் ஒப்புக்கொள் கிறார்கள்.

சான்றாக நமது நாட்டில் தொன்று தொட்டு வழக்கில் இருக்கும் யோகாசன முறைகளைப் பற்றி நமது நாட்டு பகுத்தறிவாளர்கள் கேலியும் கிண்டலும் செய்து வரு

கிறார்கள். மோட்ச லோகம் செல்ல விரும்பும் பக்தர் களுக்கு வேண்டுமானால் யோகாசனங்கள் பயன்படலாம், விஞ்ஞான பூர்வமாக அவற்றில் ஒன்றுமே இல்லை என்று பேசி வந்தார்கள். இன்றோ யோகாசன முறைகளை உலகெங்கிலும் உள்ள அறிவியல், உடலியல், மனவியல் அறிஞர்கள், யோகாசனங்கள் உடலியல்- மனவியல் தொடர்பான ஆரோக்கியத்தை வளர்க்கும் அறிவியல் பூர்வமான அடிப்படையை கொண்டவை என்பதை ஏற்றுக் கொள்கிறார்கள். அறிவியல் துறையில் முன்னனியில் இருக்கும் அமெரிக்கா போன்ற நாடுகளில் மக்கள் யோகாசனப் பயிற்சியில் அளவு கடந்த அக்கறை காண் பிக்கிறார்கள். யோகாசனப் பயிற்சி மூலமே பல சிக்கலான உடலியல், அறிவியல், கோளாறுகளை குணப்படுத்திவிட முடியும் என்றும் நோய்கள் வராமலே தடுப்பதற்கும், யோகாசனங்கள் பயன்படும் என்பதையும் உணர்ந்து தங்களது சிகிச்சை முறைகளில் யோகாசனத்தையும் இணைத்துக் கொள்கிறார்கள்.

நமது நாட்டு தியான முறைகளின் பெருமையையும், மகிமையையும் நமது நாட்டு பகுத்தறிவாளர்கள் இழித் தும், பழித்தும் பேசி வருகையில் மனத்தை உயர்நிலை படுத்தவும், மனத்தை வளமுறச் செய்யவும் உதவும் அற்புத மான சாதனம் தியான முறைகளாகும் என்பதை மேலை நாட்டு அறிவியல், மனஇயல் அறிஞர்கள் உணர்ந்து தங்கள் நாடுகளில் தியானப் பயிற்சியினை கையாளுவதில் பெரு விருப்பமும், ஆர்வமும் கொண்டு இயங்குகிறார்கள்.

இதே போன்று மந்திரங்கள் வழிபட்ட பிரார்த்தனை கள் மன ஒருமைப்பாட்டையும் மன வல்லமையையும் பெருக்கி மனிதனை பேராற்றல் படைத்தவனாக ஆக்கக் கூடிய அற்புதமான சாதனா சக்தியாகும்.

மனத்தை ஒருமுகப்படுத்துவதற்கு மேலை நாட்டு மனவியல் அறிஞர்கள் பல்வேறு யோசனைகளைச் சொல்

கிறார்கள். ஆனால் அவையெல்லாம் மிகச் சரியாக பயன் படக்கூடிய வழிமுறைகளாக இல்லை என்ற காரணத்தால் நமது நாட்டு ஆன்மீக நெறிமுறைகளை பின்பற்றி மனத்தை ஒருமுகப்படுத்துவதற்கான பயிற்சியை அளிக்கத் தொடங்கி இருக்கிறார்கள். குறிப்பாக 'தியானம்', 'ஆழ்நிலைத் தியானம்' போன்றவை மனத்தை ஒருமுகப்படுத்துவதற்கான சரியான சாதனம் என்பதை உணர்ந்து ஆழ்நிலைத் தியானம் போன்றவற்றைப் பயின்று தேர்வதற்கென ஏராளமான அயல்நாட்டு மக்கள் நமது நாட்டிற்கு வருகிறார்கள்.

தியானத்தின் அடிப்படை, இறைவன் திருவுருவத்தை மனத்தில் விடாது நிலை நிறுத்தி அலைபாயும் மனத்தை அடக்க முயற்சிப்பதாகும்.

இறைவன் திருவுருவத்தை கண்களால் ஆழ்ந்து நோக்கியவாறு அந்த உருவத்தை மனத்திலே நிலை நிறுத்த முயன்று வெற்றி கண்டால் மனம் எளிதாக வசப் படும்.

வடலூர் வள்ளல் இராமலிங்க அடிகள் குத்து விளக்கு ஏற்றி வைத்து அதன் சுடரை விடாமல் உற்று நோக்கி மனத்திலே நிலை நிறுத்துவதன் மூலம் மன ஒருமைப் பாட்டை பெற முயன்று வெற்றி கண்டார்.

மனத்தை ஒருமுகப்படுத்துவதற்கான மற்றொரு வழி முறை- ஏதாவது ஒரு சொல்லை திரும்பத் திரும்ப விடாது சொல்லிக் கொண்டே இருத்தலாகும்!

நமது ஆன்மீக சாத்திரங்களும், இறைவனுடைய திரு நாமத்தை பல நூறு முறையோ, பல்லாயிரம் முறையோ, அல்லது பல கோடி முறையோ விடாமல் உச்சரிப்பதன் மூலம் சாமான்ய மக்களும் எளிதாக மனத்தைத் தன் வயப் படுத்த முடியும் என்று நம்முடைய பண்டைய ஆன்மீகப் பெரியோர்களும் கூறி வந்தனர்.

இந்த பணியைத்தான் மந்திரங்கள் மூலம் நிறைவேற்றிக் கொள்ள நம் முன்னோர்கள் முயன்றார்கள்.

இறைவன் திருநாமங்களைத் தொடர்ந்து உச்சரிப்பதை அர்ச்சனை என்ற பெயரால் குறிப்பிடுவார்கள். ஆலயங்களில் அர்ச்சகர் இறைவன் திருநாமங்களை பல தடவை சொல்லி அர்ச்சனை செய்வதை பல தடவை பார்த்திருக்கிறோம்.

இம்மாதிரி அர்ச்சனைகளை நூறு முறையோ, ஆயிரம் முறையோ, இலட்சம் முறையோ, கோடி கணக்கிலோ, செய்வது வழக்கம். இதே போன்று நாம் நமது வீட்டில் இருந்தவாறே தனியறையில் அமைதியாக இருந்து நீண்ட நேரம் இறைவன் திருநாமங்களை அர்ச்சனை செய்து மனத்தை வசப்படுத்த முயற்சிக்கலாம்.

சிலர் ''ஸ்ரீராம ஜெயம்'' ''ஸ்ரீராம ஜெயம்'' என ஆயிரக் கணக்கில் வாயார உச்சரிப்பதன் மூலமும் ஆயிரக் கணக்கில் எழுதுவதன் மூலமும் இறைவனுடைய அனுகிரகத்தை பெற முடியும் என்று நம்புகிறார்கள்.

இவர்கள் இறைவன் அனுகிரகத்தை பெறுகிறார்களா என்பது ஒருபுறம் இருக்கட்டும். என்றாலும் இந்தப் பயிற்சியின் மூலம் இவர்கள் மனத்தை தன் வயப்படுத்தவும் வல்லமையூட்டவுமான ஆற்றலைப் பெறுகிறார்கள் என்பது மட்டும் உண்மை.

மனத்தை தன் வயப்படுத்தி ஒரு முகப்படுத்தி எந்த ஒரு முயற்சியின் மீதும் கொண்டு செலுத்தினால் அந்த முயற்சி நிச்சயம் வெற்றி பெறும் என இக்கால மனவியல் அறிஞர்கள் யோசனை சொல்லுகிறார்கள்.

'எண்ணம் போல் வாழ்வு' என்னும் ஒரு பழமொழி கூறக் கேட்டிருப்பீர்கள்.

நாம் வாழ்க்கையில் எதைப் பற்றி நமது எண்ணத்தை ஒருமுகப்படுத்தி ஆழ்ந்து சிந்திக்கிறோமோ அந்த நிலையை மனிதன் நிச்சயமாக அடைய முடியும் என் பதைத் தான் 'எண்ணம் போல் வாழ்வு' என்னும் பழமொழி நமக்கு உணர்த்துகிறது.

தன்னம்பிக்கையும் உழைக்கும் மனப்பான்மையும் கொண்ட ஒருவர்தான் வாழ்க்கையில் நிச்சயமாக முன்னேறி எதிர்காலத்தில் உயர்வு நிலையை அடை கிறார்.

தன்னம்பிக்கை இல்லாமலும், சோர்வு மனப்பான்மை யும் கொண்ட சிலர், தங்களுக்கு நல்ல எதிர்காலமே இல்லை என்றும் படுமோசமான கீழ்த்தர வாழ்க்கையே தங்களுக்கு அமையுமென்றும் தொடர்ந்து அவர்கள் எண்ணிக்கொண்டு இருப்பார்களானால் அப்படிப்பட்ட மோசமான வாழ்க்கை நிலைதான் அவர்களுக்கு அமையும்.

வாழ்க்கைச் சூழலில் எவ்வளவு மோசமான, சிக்கலான சூழ்நிலை அமைந்திருந்தாலும் மனத்திற்கு வலிமையூட்டி எதிர்காலத்தை குறித்து நம்பிக்கையூட்டும் எண்ணங்களை வளர்த்துக் கொண்டே இருந்தார்களானால் எதிர்காலத் தில் அவர்கள் நிச்சயமாக உயர்ந்த நிலையை எட்டிப் பிடிப் பார்கள்.

மனத்தை ஒருமுகப்படுத்தி எண்ணங்களுக்கு வலிமை யூட்டினால் நிச்சயமாக வெற்றி தானே கிடைக்கும். மனத்தை ஒருமுகப்படுத்தி, எண்ணங்களுக்கு வலிமையூட்டி மனிதனை பேராற்றல் உடையவனாக மாற்றும் ஓர் அரிய சாதனம்தான் மந்திரங்கள் ஆகும்.

ஆன்மீக உணர்வோ, தெய்வ நம்பிக்கையோ இல்லாத வர்கள் கூட மந்திரங்களைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் மன உறுதியையும், மன ஒருமைப்பாட்டையும்

பெற்று வாழ்க்கையில் பேராற்றல் உள்ளவர்களாக தங்களை மாற்றிக் கொண்டு வாழ்க்கையில் பெரிய வெற்றி களை சந்தித்து உயர்வடைய முடியும்.

விநாயகப் பெருமான் உபாசனா விதி

பூவுலகில் மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய எல்லா வித மான தோஷங்களும் தொல்லைகளும் அகன்று மன நிம்மதி யும், மகிழ்ச்சியும், வாழ்க்கை இன்பமும் அமைய வழி வகுத்து அருளுபவர் விநாயகமூர்த்தி ஆகும்.

எந்த தெய்வத்தையும் வழிபடுவதற்கு முன்னால் விக்னேஸ்வரரை உபாசனை செய்து வழிபடுவது மரபு.

விடியற்காலையில் சூரியன் உதயமாவதற்கு முன்னால் எழுந்து காலைக் கடன்களை முடித்து நல்ல நீரில் நீராடி பட்டுவஸ்திரம், அல்லது நார்மடி வஸ்திரத்தை அரையில் உடுத்திக் கொள்ள வேண்டும்.

பிறகு விபூதி அணிந்து அனுஷ்டானம் முதலியவற்றை முடித்து பரிசுத்தமான இடத்தில் தன்னந்தனியனாக பத்மாசனமிட்டு அமரவேண்டும். மனத்தை அலைய விடாமல் வசப்படுத்தி அடியில் தரப்பட்டிருக்கும் சக்கரத்தை எழுதி பூஜையில் வைத்து தூபதீபம் கொடுக்க வேண்டும். பிறகு விக்னேஸ்வரர் மூல மந்திரத்தை செபிக்க வேண்டும்.

மூல மந்திரம் வருமாறு:

ஓங் றீங் அங் உங் சிங் கணதேவாய நம:
சகல துரித பூத வாதைகளும் நசிமசி.

மேற்சொன்ன விக்னேஸ்வரர் மந்திரத்தை 1008 முறை மன ஒருமைப்பாட்டுடன் செபிக்க சகல விதமான தொல்லை தொந்தரவுகளும் விலகி காரிய சித்தி ஏற்படும்.



நோய்கள் அகல

ஒரு வெற்றிலை அல்லது உள்ளங்கையில் விபூதி பரப்பி அதில் விக்னேஸ்வர சக்கரத்தை ஐங்கோணமாய்க் கீறி அதிற் பீஜாக்ஷரங்களை வரைந்து அதைச் சுற்றிலும் ஓங்காரத்தைப் போட்டு மூலமந்திரஞ் செபிக்க சகல வித மான பிணிகளும் அகன்று விடும். நினைத்த காரியங்கள் எல்லாம் வெற்றி பெறும்.

பல வித தோஷங்கள் அகல

பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும், ஏற்படுகிற காரணமில்லாத பயம், காத்து, கருப்பு போன்ற துர்தேவதைகளால் ஏற்படக் கூடிய தோஷங்கள், இந்த தோஷம் காரணமாக ஏற்படக் கூடிய காய்ச்சல், சிரசில் உண்டாகக் கூடிய செவ்வாப்பூகட்டிகள் மற்றும் சிரசு தொடர்பான ரோகங்கள், இழுப்பு, வலிப்பு, போன்ற

நரம்புத் தொடர்பான நோய்கள் அகலுவதற்கு கணபதி மூல மந்திர உபாசனை ஒன்று நடத்த வேண்டும்.

இதற்கான பூசனா விவரம் வருமாறு: செம்பு அல்லது மண் கலத்தில் சுத்தமான நீரை நிரப்ப வேண்டும்.

அதில் மாவிலை கொத்து போட்டு, கும்ப வஸ்திரம் கட்டி மஞ்சள், குங்குமம் அட்சதை போட்டு அதில் தாம்பூலம், பழம், தேங்காய், சந்தனம், மலர், சாத்தி கற்பூரம், சாம்பிராணி இவற்றைக் கொண்டு தூபதீபம் கொடுத்து வழிபாடு நடத்தவேண்டும்.

வழிபாடு நிறைவேறிய பிறகு கண்களை மூடி மனத்தை ஒருநிலைப் படுத்தி கீழ்க்கண்ட கணபதி மூல மந்திரத்தை 1008 முறை ஜெபிக்க வேண்டும்.

கணபதி மூல மந்திரம்

ஓம் நமோ பகவதே ஐயும் கிலியும் சவ்வும் கணபதி வசிவசி சுவாகா.

மற்றவர்களால் ஏற்படும் சங்கடங்கள்

சில சமயம் விரோதம், துவேஷம் காரணமாகவோ பொறாமை, பொச்சரிப்பு போன்ற உணர்வுகள் காரண மாகவோ சிலர் நமக்கு, நாம் அறிந்தும் அறியாமலும் பலவிதமான சங்கடங்களை பல்வேறு வழிகளில் நம் மீது ஏவி விடுவார்கள். இத்தகைய தொந்தரவுகளை முற்றிலு மாக அகற்றி மனநிம்மதி பெறுவதற்கு வேறு விதமான விக்னேஸ்வரர் மந்திரத்தை உபாசனை செய்யவேண்டும்.

உதய காலத்தில் எழுந்து நதியில் நீராடி பட்டு வஸ்திரம் அணிந்து விபூதி தரித்துக் கொள்ள வேண்டும்.

பிறகு மாம்பலகை ஆசனத்தில் கிழக்கு முகமாக தனியாக அமர வேண்டும்.

அடுத்து, பின்வரும் சக்கரத்தை தங்கத் தகட்டில் அல்லது தாமிரத் தகட்டில் எழுதி தூப தீபம் காட்டி இதற்கான மூல மந்திரத்தை ஜெபிக்க வேண்டும்.



ஓம் நமோ தசாக்ஷர மந்திராய மூஷிகவாகனாய ஐயும் கிலியும் சௌவும் ஆ—ஊ—மகாகணபதி எனக்கு வசமாக சுவாகா.

இந்த மந்திரத்தை 1008 முறை ஜெபிக்க வேண்டும்.

விநாயகர் அகவல்

பொதுவாக அன்றாடம் அதிகாலையில் நீராடி சுத்தமான ஆடை அணிந்து விபூதி தரித்து விநாயகர் விக்ரகம் அல்லது படத்தின் முன்னால் நின்று விநாயகர் அகவலை

வாய் விட்டு சொல்லி ஆராதனை செய்து வந்தால் சகல பிணிகளும், தோஷங்களும் பிறரால் விளையும் துன்பங்களும், பிற தொல்லைகளும் அகன்று வாழ்க்கையில் மன அமைதி தோன்றும்.

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலப்பு பல இசைப் பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகிலாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக்கோடும்
வேழ முகமும் விளங்குசிந்தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற்குடி கொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிருபுயமும்
மூன்று கண்ணும் மும் மதச்சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நிறைந்த கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிகவாகன
இப்பொழு தென்னை யாட்கொள்ளவேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந் தருளி
மாயாப்பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தெனுளந்தனிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடிவைத்துத் திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டாவுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங்காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறுங்கருணை இனிதெனக் கருளிக்

கருவிகளொடுக்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள்கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்கமறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங்காட்டி
ஆறாதாரத் தங்குச நிலையும்
பேறாநிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறிவித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமுங்காட்டி
மூன்றுமண்டலத்து முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவிலுணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங்கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முகதூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்டகாயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயிற்காட்டி
இருத்தி முத்தியினி தெனக்கருளி
என்னையறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக்களைந்து
வாக்குமனமும் இல்லா மனோலயம்
தேக்கியேயென்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளியிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்

எல்லையில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தேயருள் வழிகாட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கருப்புள்ளேகாட்டி
வேடமுநீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன்கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தினிலை யறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே!

சரவணபவன் உபாசனா மந்திரம்

குறிப்பாக பெண்களுக்கு ஏற்படக் கூடிய உடலியல், மனவியல், குறைபாடுகள் அனைத்தும் முற்றிலுமாக விலகி, முழுமையான மன அமைதி பெறுவதற்கு சரவண பவன் உபாசனா மந்திரத்தை ஜெபிக்க வேண்டும்.

முக்கியமாக பெண்களின் முகத்தை விகாரப்படுத்தும் கரும் தேமல்கள், காரணமற்ற அச்சம், ஹிஸ்டீரியா கோளாறுகள், நிவர்த்தியாகாத மாதவிடாய் தொடர்புடைய நோய்கள் காரணம் தெரிந்து கொள்ள முடியாதவாறு அடிக்கடி ஏற்படும் காய்ச்சல் போன்றவை இந்த சரவணபவன் உபாசனா மந்திரத்தை முறைப்படி ஜெபிக்க, குறைபாடுகள் அகன்று மனநிம்மதி கிடைக்கும்.

பாதிக்கப்பட்ட பெண்கள் சூரிய உதயத்திற்கு முன்னால் நீராடி சுத்தமான பட்டு வஸ்திரத்தை தரித்து விபூதி அணிந்து அனுஷ்டானத்தை முடித்து தனி இடத்தில் இருக்கவேண்டும்.

அவர்கள் இருக்கும் இடத்தில் நீர் தெளித்து மெழுகி கோலமிட்டிருக்க வேண்டும். கும்பத்தில் நீர் வைத்து

கும்பத்தில் பட்டு வஸ்திரம் சாத்தி மாவிலை சொருகி அதில் தேங்காய் வைத்திருக்க வேண்டும். கும்பத்தின் முன் நீர் தெளித்து சுத்தம் செய்யப்பட்ட வாழை இலையை விரித்து வைத்து தாம்பூலம், தேங்காய், பாயசம், பஞ்சாமிர்தம் வைத்து தூப தீபம் கொடுத்து சரவணபவன் உபாசனா மந்திரத்தையும் ஸ்ரீ சண்முக மூல மந்திரத்தையும் தனித்தனியாக 1008 தடவை ஜெபிக்க வேண்டும்.

மந்திரம் ஜெபிக்கும் பெண்மணி வில்வப்பலகை அல்லது மாம்பலகை ஆசனத்தில் அமர்ந்திருக்க வேண்டியது சிலாக்கியம்.

பாதிக்கப்பட்ட பெண்களின் உடல், மன, பாதிப்புக்களுக்கேற்ப அதிகபட்சமாக 41 நாட்கள் அன்றாடம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஜெபத்தில் அமரவேண்டும்.

சரவணபவன் உபாசனா மந்திரம்

ஓம் நமோ நமசிவாயம் மயில்வாகனா பாலசுப்ரமண்யா
ஐயும் கிலியும் சரஹணபவ மமவசிமசி சுவாகா

ஸ்ரீ சண்முக மூல மந்திரம்

ஓம் பகவதி புத்திரா—வேலாயுதா வேகமாய் வந்தேன் முன் மனோ சுபீஷ்டம் சாதிக்கத்தக்க சரஹணபவா—ஓம் ஐயும் கிலியும் சவ்வும் ஸ்ரீம் சண்முகதேவா வசிமசி சுவாகா.

உபாசனா மந்திர சக்கரம்

மந்திரத்தை உற்சாடனம் செய்யும்போது உபாசனா ஸ்ரீ சக்கரத்தை முறைப்படி தயாரித்து பூஜையில் வைத்தால் மிகச் சிறப்பான பலன் கிடைக்கும்.

ஸ்ரீசக்கரத்தை கீழ்க்கண்ட விதமாக தயாரிக்க வேண்டும்:

6 அங்குல அகலம், 6 அங்குல நீளமுள்ள சந்தனப் பலகையை கீழே குறிப்பிட்டிருக்கும் சக்கரம் போல அறு கோணம் கீறி மத்தியில் ஸ்ரீ சத்தியும், ஆறு வீடுகளிலும் சரவணபவ என்று ஆறு எழுத்தையும் அடக்கி அறு கோணத்து நுனியில் ஸ்ரீ என்ற எழுத்தை ஆறுக்கும் எழுதி.



அறுகோணத்துக்கு வெளியில் சௌக்கமான வீடு சுற்றில் வரைக் கீறி அதற்கு கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என நான்கு வாசல்களை விட்டு அவைகளில் ஸ்ரீ என்ற எழுத்தை எழுதி சக்கரத்தை முடிக்கவேண்டும்.

1008 முறை மந்திர உற்சாடனம் செய்யும்போது ஒவ்வொரு தடவையும் வெள்ளை மலரைக் கொண்டு அர்ச்சனை செய்ய வேண்டும்.

பிறரை வசியம் செய்ய ஐங்தெழுத்து மந்திரம்

அவசியத்தை முன்னிட்டு மனித வசியம் செய்ய வேண்டிய நிலை சில சமயம் ஏற்படும். நமது ஜென்ம விரோதிகளை வசியப்படுத்தவும், சிலரிடம் அவசியமான காரியங்களை சாதித்துக் கொள்ளவும், நாம் விரும்பும் பெண் அல்லது ஆணை நம் வயப்படுத்தவும், வசிய மந்திரத்தை பிரயோகித்து பயன் பெற முடியும்.

நாம் மேற்கொண்டுள்ள பெரிய முயற்சிகள் எந்த வித இடையூறும் இல்லாமல் நிறைவேறவும் வசிய மந்திரத்தை பிரயோகிக்க வேண்டியிருக்கும்.



ஐந்தெழுத்து (சடாக்ஷர) மந்திரத்தை உற்சாடனம் செய்யும்முன் மூல மந்திரத்தை வில்வப் பலகையில் வரைந்து எழுத்துக்களை அடக்கி பூஜையில் வைத்து கீழ்க்கண்ட மூல மந்திரத்தை உத்திராட்ச மணிவடத்தின் துணையுடன் 1008 முறை உற்சாடனம் செய்யவேண்டும்.

வசிய மந்திரம்—1

சரஹணபவஹ்ரீங் சங்கரியீன்ற
சண்முகஹ்ரீங் ஓங்கார
சமயகாருண்யத் தலைவனே முருகா
தந்தியின் சுழிதிரிகோணச்
சரஹண பவனுனைச் சகலருந்து திக்கச்
சரியையுங் கிரியையு ஞானச்
சதங்கை பொற்றாளிற் கலீரென மயின்மேற்
றாவிமாசத்தி வேற்றாங்கி
சரஹண பவவிச்சமய நீவந்துன்
சவ்-ரவ்-ஹவ்-ணவ்-பவ்-வவ்
சங்-கிலியும் ஐயும்-ஓமெனவசியஞ்
சாற்றவன் பில்லி சூன்யம் பேய்
சகலமுமாடத் தலைவிரித்தோடச்
சங்-ஹ்ரீங்-சிங்-மங்-கெனவலா
சரணமாமென முன்னாடி வந்தருள்வாய்
சண்முகா சரஹண பவனே.

இந்த மந்திரம் வசிய நோக்கத்துடன் சொல்லப்பட்டாலும் சகலவிதமான தோஷங்களையும் அகற்றி நமக்கு ஏற்படும் தொல்லைகளை விலக்கி வாழ்க்கையில் நன்மைகளை ஏற்படுத்தும்.

வசிய மந்திரம்—2

ரஹண பவசவென்ரடிக்கத் துதிக்க
ராட்ச கணமுதலொடுங்கி
ரவிதனைக் கண்டபனிபது போலாம்
ரங்-கெனப்பிணி பலவடங்கும்
ரஹணபவச-வென்ன நாவுக்கிரைக்கி
நற்றவப்பேருபாக்கியமாம்.
லலி-லிலி-லுலுவென்றகத்தினிற்ஜெபிக்க.
நானிலந் தொழும்-வங்-சிங்-கென்ன
ரஹணபவச-ஹங்-சிங்-வங் கென்ன
நமனனு கான்யனெழுதான
நம்நம்-சிவய-நம்-மெனப் பீடை
நவில்மதிகண்டாரப் போலாம்.
ரஹண பவச-வெனும் பொருட் பொதிகை
நாதனுக்கோதிய குருவே
ரஞ்சிதக்குறமாது வஞ்சி காதலனே
ரஹண பவச நாயகனே

பகை தவிர்த்து சகல தோஷங்களை விலக்கும் குருபர மந்திரம்

பவசரஹண நின்யரமெனுமடியர்
பவங்கெடசுதந் தருமணியே
பரா-பரி-ஐயும்-கிலி-ஹரிசவ்வும்
பங்-ரீங்-ஓ-மெனுமகார
பவசரஹண மென்றுணைத் தொழுமுத்தி
பதித்திடுஞ் சத்தியாம் வெற்றி
பரை பரிமவனை திரிபுரபவனை
பகர் நமசிவயவரம் பேறும்
பவசரஹண வென்றோத மாமயின் மேற்
பரிந்தெழுந்த பயமென்றருளி

பசிபிணி கெடவும் விடபயமுதுமை
படிற்றுரைகடையவர் நெஞ்சம்
மாசமுவாசை டங்-டிங்-கென்னவும்
படுவிளைப்பூத வேதாளப்
பகைதவிர்த்தாள்வாய் பவசரஹணநின்
பாதமேகதி குருபரனே.

கந்தர் சஷ்டி கவசம்

வாழ்க்கையில் மக்களுக்கு ஏற்படக்கூடிய எந்த விதமான கஷ்ட நஷ்டங்களையும், செய்வினை, தோஷங்களையும், மற்றும் எதிர்பாராமல் ஏற்படுகின்ற இடர்பாடுகளையும் முற்றிலுமாக நிவர்த்தி செய்து மன நிம்மதி பெறுவதற்கு நம்பிக்கையான பற்றுக் கோலாகத் திகழுவது கந்த சஷ்டி கவசம்.

கந்த சஷ்டி கவசத்தின் மகிமையும், பலனையும் கூற வந்த நமது ஆன்மீக பெரியோர்கள் கீழ்க்கண்டவாறு மொழிந்தருளி இருக்கிறார்கள்.

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம், நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம்பலித்துக்-கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடு நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந்தனை

வாழ்க்கையில் சற்றும் எதிர்பாராத நிலையில் மனத்தாலும் செயலாலும் பொருள் வசதியினாலும் சமாளிக்க முடியாத அளவுக்கு பயங்கரமான இடர்பாடுகள் வாழ்க்கையில் ஏற்பட்டு விடுவதுண்டு.

அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் கந்த சஷ்டி கவசத்தை மனமுருக, மெய்யுருக, பயபக்தியுடன் உற்சாடனம் செய்தோமானால் எதிர்பட்ட இடையூறுகள் சூரியனைக் கண்ட

பனி போல விலகி மறையும். மனத்திலே ஏற்பட்ட கொந் தளிப்பு அடங்கி மனத்துக்கு ஆறுதல் ஏற்படும்.

சில சமயம் ஆள் அரவம் சிறிதுமற்ற பயங்கர சூழல் நிறைந்த தனி வழியில் நள்ளிரவில் நடக்க நேரிட்டால் கந்த சஷ்டி கவசத்தை வாய்விட்டு உச்சரித்தவாறு நடந் தால் சரவணபவ புகனின் அருள் நம்மையறியாது பக்க துணையாக வரும்.

ஒரு பெரிய தொழிலை துவங்குகிறோம்; வணிகத்துறை யில் பெரிய முயற்சி ஒன்றை ஆரம்பிக்கிறோம்; அல்லது மிக உயர்ந்த ஒரு பதவிக்காக விண்ணப்பம் செய்கிறோம்; இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் கந்த சஷ்டி கவசத்தை தகுந்தவாறு பூஜைகள் செய்த பிறகு உற்சாடனம் செய்து முடித்துப் பின் நமது முயற்சிகளைத் தொடங்க வேண்டும்.

அப்போது குமரன் திருவருள் தோன்றாத் துணையாக அருகிருந்து நமது முயற்சிகள் ஆக்கமும், ஊக்கமும் பெற உதவும்.

இனி நமது மனத்தை குமரன் திருவடியில் சமர்ப்பித்து கந்த சஷ்டி கவசத்தை துவங்குவோமாக.

வருக வருக குமரா வருக

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண் கிணியாட
மையனடஞ் செயும் மயில் வாகனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்று வந்து
வரவரவேலா யுதனார் வருக.
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற

மந்திரவடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக்குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹணபவச ரரரர ரரர
ரிஹணபவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹ வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிறநிறென
வசரஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னையாளு மிளையோன் கையில்
பன்னிரெண்டாயுதமும் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங்கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங்கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளிஐயும்
நிலைபெற்றன் முன் நித்தமுமொளிரும்
சண்முகன்றீயும் தனியொளியொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடியாறும்
நீறிடுநெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிருதிண்புயத் தழகியமார்பில்
பல்பூஷணமும் பதக்க முந்தரித்து
நண்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்

செப்பழகுடைய திருவயிறுந்தியும்
துவண்டமருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராகவும்
இருதொடை யழகும் இணை முழந்தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொக, மொக, மொக, மொக,
மொக, மொக, மொகென
நக நக நகநக நக நக நகென
டிகு குணடிகுடிகு டிகுகுணடிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனையாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்

பன்னிரு விழியால் பாலனைக் காக்க

லாலாலாலா லாலாவேசமும்
லீலாலீலா லீலாவிநோதனென்
றுன் திருவடியை உறுதியென்றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடிகாக்க
என்னுயிர்க்குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர் வேலிரண்டு கண்ணினைக் காக்க
விதி செவியிரண்டும் வேலவர் காக்க
நாசி களிரண்டும் நல்வேல் காக்க

பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருபல் முனைவேல்காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங்கழுத்தை இனியவேல் காக்க
மார்பையிரத்ன வடிவேல் காக்க
சேரிளமுலைமார் திருவேல் காக்க
வடிவேலிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடையழகுறச் செவ்வேல் காக்க
நாணாங்கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறியிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடையிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல்காக்க
ஐவிரலடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன் கையிரண்டும் முரண் வேல்காக்க
பின் கையிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக்கமலம் நல்வேல் காக்க
முப்பானாடியை முனைவேல் காக்க
எப்பொழுதுமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகற்றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள்தன்னில் அணையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க

காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட

அல்லற் படுத்தும் அடங்காப் பேய்கள் அஞ்சி நடுங்கிட...

பில்லி சூனியம் பெரும்பகையகல
வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற்படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்மராக்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக்கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்பச் சேனையும்
வல்லினுமிருட்டிலும் எதிர்படுமண்ணரும்
கன பூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளர்களும்
என் பெயர் சொலவும் இடிவிழுந்தோடிட
ஆனையடியினில் அரும்பாவைகளும்
பூனைமயிரும் பிள்ளைகளென்பும்
நகமுமயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பல கலசத்துடன்
மனையிற்புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ்சனமும் ஒரு வழிப்போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்துகுலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய் விட்டலறி மதிகெட்டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறிய
கட்டுகட்டு கதறிடக்கட்டு
முட்டுமுட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடுவேலை வெருண்டது வோட
புலியும்நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித் தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில்இறங்க
ஒளிப்புஞ்சுளுக்கும் ஒரு தலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப்பித்தம்
சூலை க்ஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவென்படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்தரணை பருவரையாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீ யெனக் கருள்வாய்.

வறுமை அகல குறைகள் நீங்க...

ஈரேழுலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவருமெனக்கா
மண்ணாளரசரும் மகிழ்ந்துறவாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்

சரஹணபவனே சைலொளிபவனே
திரிபுரபவனே திகழொளிபவனே
பரிபுரபவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமராபதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பாகடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப்பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வராயா
சமராபுரிவாழ் சண்முகத்தரசே
காரார் குழலாள் கலைமகணன்றாய்
என்னா விருக்க யானுனைப்பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனை
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினேனாடினேன் ஆவினன்பூதியை
நேசமுடன்யான் நெற்றியிலணியப்
பாசவினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடனிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குருவாழ்க
வாழ்க வாழ்க மலைக் குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசன்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்

எத்தனையடியேன் எத்தனை செய்யினும்
பெஞ்றவனீ குரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரியமளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திடவருள் செய்
கந்தர்சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடனாளும்
ஆசாரத்துடன் அங்கந்துலக்கி
நேசமுடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசமி தனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுருச் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும்வசமாய்த்
திசை மன்னரெண்மர் சேர்ந்தாங் கருளுவர்
மாற்றலரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோண் மகிழ்ந்து நன்மையளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்.
கந்தர் கை வேலாம் கவசத்தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற்காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடி பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்துரு சங்காரத்தடி
அறிந்தெனதுள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாக
சூரபத்மாவை துணித்த கையதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமுதளித்த
குருபரன் பழநிக் குன்றினிலிருக்கும்

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி.
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்வியதேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பாபோற்றி
கடம்பாபோற்றி கந்தாபோற்றி
வெட்சிபுனையும் வேளே போற்றி
உயர்கிரி கனகசபைக் கோரரசே
மயிலடைமிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரஹண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகாசரணம்!

தோஷத்தின் காரணமாக ஏற்படுகிற காய்ச்சல் விலக மந்திரங்கள்:

சிலருக்கு காரணம் தெரிந்தோ, தெரியாமலோ கடுமையான காய்ச்சல் ஏற்படும். பாதிக்கப்பட்டவரை மருத்துவசிகிச்சைக்கு அழைத்துச் சென்றால் நோய்க்கான காரணம் என்ன என்பதை மருத்துவரால் கண்டுபிடிக்க இயலாது. இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் பாதிக்கப்பட் டோருக்கு ஏற்பட்டிருக்கும் காய்ச்சல் ஏதோ ஒரு தோஷ பாதிப்பினால் ஏற்பட்டதாக இருக்க வேண்டும் என உணர வேண்டும்.

இவ்வாறு தோஷம் காரணமாக ஏற்படும் காய்ச்சல் அவரவருடைய ஜென்ம நட்சத்திரங்களுக்கேற்ப பாதிப் புக்கு உள்ளாகியிருக்கும். இந்த வகையில் நட்சத்திர வாரியாக பாதிக்கப்பட்டவரின் உடல் நிலை குறித்தும் அதற்கான பரிகாரம் குறித்தும் விளக்கம் தருவோம்.

அசுவினி நட்சத்திரம்

அசுவினி நட்சத்திரத்தை ஜென்ம நட்சத்திரமாகக் கொண்டவருக்கு நட்சத்திரம் உதயமானது 1-வது பாத

மாக இருந்து காய்ச்சல் தோன்றியிருந்தால் ஒன்பது நாட்களில் தானாகவே குணமாகும். 2-பாதத்தில் பிறந்தவர்க்கு தோன்றும் காய்ச்சலானது 10 வது நாளில் மிகக் கடுமையான நிலையை அடையும். அந்த சமயத்தில் தகுந்த பரிகாரம் செய்யாவிட்டால் உயிருக்கே ஆபத்து விளையும். காய்ச்சல் அசுவினி நட்சத்திரத்தின் 4-ம் பாதத்தவர்க்கு காய்ச்சல் தோன்றினால் மிகக் கடுமையான விளைவுகளை சந்திக்கவேண்டும் என்பது விதி. ஆனால் தகுந்த சாந்தி பரிகாரங்களை செய்தால் காய்ச்சலில் கடுமையான விளைவுகள் குறைந்து முற்றிலும் குணமாகும்.

சாந்தி பரிகாரம்

ஆவதோ ரசுவனியி லன்று தித் திடுஞ்சுரம்
போவதும் பத்துநாளினிற் போகாவிடி சாந்திகேள்
ஈவதும் நவதானிய மிங்குவர் தலை சுற்றி
கோவிற்கு வைத்திடக் குணப்படுவார்களே.

இதன் பொருள்

அசுவினி நட்சத்திரத்தை ஜென்ம நட்சத்திரமாகக் கொண்டவருக்கு தோஷம் தொடர்பான காய்ச்சல் ஏற்பட்டு இருந்தால் சாதாரணமாக 10 நாட்களுக்குள் காய்ச்சல் அடங்கி குணம் ஏற்பட வேண்டும்.

அவ்வாறு குணம் ஏற்படாமல் நோய் தொடர்ந்து நீடிப்பதுடன் அதன் தன்மையும் கடுமையாக இருந்தால் அதற்கு சாந்தியாக நவதானியத்தை அந்த நோயாளியின் தலையைச் சுற்றி பசு மாட்டிற்கு வைத்துவிடவேண்டும். அதற்குப் பிறகு மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தினால் நல்ல பலன் கிடைக்கும்.

பரணி நட்சத்திரம்

இந்த நட்சத்திரக்காரருக்கு 1-ம் பாதத்தில் காய்ச்சல் ஏற்பட்டிருந்தால் மூன்று நாட்களில் வேகம் குறைந்து விடும். 2ம் பாதத்தில் தோன்றிய காய்ச்சல் ஏழு நாட்களில் தீரும். மூன்றாம் பாதத்தில் தோன்றும் காய்ச்சலானது பதினைந்து நாட்களில் வேகம் குறையும். 4-ம் பாதத்தில் தோன்றிய காய்ச்சலானது. 15 நாட்களில் குறைந்தாக வேண்டும். அவ்வாறு குணமாகாவிட்டால் விளைவுகள் மிகக்கடுமையாக இருக்கும். அந்த நிலையில் தகுந்த சாந்தி பரிகாரம் செய்தால் நிலைமை கட்டுக்குள் அடங்கும்.

சாந்தி பரிகாரம்

பரணியிற் சுரமுதிக்கப்பாரைந்து நாளில் விடும்
விரைவினில் விடாத காலமெள்ளுஞ் சோர்த்தலைசுற்றி
நிறைவிடவூர் மேற்கினில் நிலைக்கநாலு சந்தியில்
பறவைத் திடவங்கே பறந்து போகும்நோயதே.

இதன் பொருள்

பரணி நட்சத்திற்குரியோருக்கு தோஷம் தொடர்புடைய காய்ச்சல் தோன்றினால் அதிகபட்சமாக 5 நாட்களில் அதன் வேகம் குறைந்துவிட வேண்டும். அவ்வாறு விடாமல் தொடர்ந்தும், கடுமையாகவும் ஆகுமானால் எள்ளும் சோறு கலந்து நோயாளியின் தலையைச் சுற்றி பிறகு அதை கொண்டு போய் ஊருக்கு மேற்கே நாற்சந்தியில் வைத்துவிட வேண்டும். காய்ச்சல் குறைந்து கட்டுக்கடங்கிவிடும். அதற்குப் பிறகு மருத்துவ சிகிச்சை மேற்கொண்டால் நல்ல பலன் கிடைக்கும்.

கிருத்திகை நட்சத்திரம்

கிருத்திகை நட்சத்திரத்தை ஜென்ம நட்சத்திரமாக கொண்டவர்களுக்கு 1-ம் பாதத்தில் தோஷக் காய்ச்சல்

தோன்றினால் 9 நாளில் குணம் தெரியும். 2-ம் பாதத்தில் தோன்றிய காய்ச்சல் 10 நாளில் தீரும். மூன்றாம் பாதத்தில் தோன்றிய காய்ச்சல் 15 நாளில் குணமாகவேண்டும். 4-ம் பாதத்தில் தோன்றிய காய்ச்சலானது 18 நாளில் இயல்பு நிலையை அடைய வேண்டும். பொதுவாக 21 நாட்களுக்குள் காய்ச்சல் குணமாகவில்லை என்றால் தாமதிக்காமல் சாந்தி பரிகாரம் செய்ய வேண்டும்.

சாந்தி பரிகாரம்

கிருத்திகைச் சுரமுந் தோன்றிற் கேளிருபத் தோர்நாளில்
பொருத்தமாக நிற்பது போகாவிடிலே நெய்யுஞ்சோறு
உருத்தமாகச் சுற்றியேய ங்கூரக் கினிமூலையில்
திருத்தமாக வைத்திடவுந் தீருஞ் சுரமங்ஙனே.

இதன் பொருள்

கிருத்திகை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் அனேகமாக 21 நாட்களில் குணப்பட்டுவிட வேண்டும். அப்படியின்றி நோய் தொடர்ந்து கடுமையாக இருக்குமானால் அதற்கு சாந்தியாக நெய்யும் சோறும் அந்த நோயாளியின் தலையை சுற்றி அந்த ஊரின் அக்கினி மூலையில் வைத்து விட்டு வர வேண்டும். காய்ச்சல் உடன் இறங்கி கட்டுக்குள் வந்துவிடும்.

ரோகிணி நட்சத்திரம்

இந்த நட்சத்திரத்தின் 1ம் பாதத்தில் பிறந்தவருக்கு தோன்றும் தோஷக் காய்ச்சல் பத்து நாளில் குணமாகும். 2-ம் பாதத்தில் பிறந்தவருக்கு தோன்றிய காய்ச்சலானது 18 நாட்களில் குணமாகும். 3-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் காய்ச்சலானது 28 நாட்களுக்குள் நலமாகும், 4-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு காய்ச்சல் தோன்றினால் 32 நாள்களில் குணமாக வேண்டும்.

தொடர்ந்து காய்ச்சல் கடுமையாக இருக்குமானால் சாந்தி பரிகாரம் செய்ய வேண்டும்.

சாந்தி பரிகாரம்

மந்தமாகும் வாய்பிளத்தும் வாந்தி செய்திருமிடும்
சந்தமலம் விடுஞ் சலமிறங்கும் போதினில்
குந்திதொந்தரையாந் தேகங் கொப்பளிக்குங்காய்த்திடும்
தொந்தவாய்வும் பரியுஞ் சுருண்டிடுஞ் சொரியுமே
பார்க்கமார் வயற்றினிற்கும் பாறைபாய்ச் சினாற்போல
கோர்க்கவே கண்டம் பிடரிக்குந் திமிராயேறிடும்
ஏர்க்கவேபதி னோர் நாளிலேகிடு மோகாவிடின்
தீர்க்கமாய்ப் பால்சோறுஞ் சுற்றிச் சேருமூர் நடுவிலே.

இதன் பொருள்:

ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தோருக்கு அவர்கள் பிறந்த நட்சத்திர பாதங்களுக்கு ஏற்ப தோன்றும் தோஷக் காய்ச்சலானது மிகக் கடுமையான அறிகுறிகள் கொண்டதாக இருக்கும்.

நோயாளியினுடைய உடல் இயல்பு மந்தமாக இருக்கும். வாந்தி இருக்கும். மலசலம் இருக்கையில் எரிச்சலும் குத்தல்களும் இருக்கும். உடல் கடுமையான சூட்டுடன் அமையும். அடிக்கடி வாய்வு பரியும். மார்புக்கும் வயிற்றுக்குமிடையே இழுத்து பிடித்தாற்போல வலி இருக்கும்.

பொதுவாக 11 நாட்களில் காய்ச்சலின் வேகமும் உடல் அறிகுறியும் குறைந்தாக வேண்டும். அவ்வாறு குறையாமல் நிலைமை தொடர்ந்து நீடிக்குமானால், பால் சோறு பொங்கி நோயாளியின் தலையைச் சுற்றி ஊருக்கு மத்தியில் வைத்துவிட்டு வரவேண்டும். காய்ச்சலும், உடல் உபாதைகளும் துரிதமாக இறங்கி வரும்.

மிருக சீரிஷ நட்சத்திரம்

இந்த நட்சத்திரத்தில் 1-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் தோஷக் காய்ச்சல் 12 நாட்களுக்குள் இறங்கும். 2-ம் பாதத்தவருக்கு தோன்றும் காய்ச்சல் 15 நாளில் இறங்க வேண்டும். 3-ம் பாதத்தவருக்கு ஏற்பட்ட காய்ச்சல் 18 நாட்களிலும் 4-ம் பாதத்தில் தோன்றியவருக்கு 20 நாட்களிலும் நோய் குணமாக வேண்டும். குணமாகத் தவறினால் கீழ்க்கண்டவாறு சாந்தி பரிகாரம் செய்ய வேண்டும்.

சாந்தி பரிகாரம்

மிருகசீரிடச் சுரம்விலகு மாரநாளொன்பதில்
வெருவருவே நிற்காவிடில் வெள்ளைப்பூ வுளுந்துமே
சிரஞ்சுற்றிப் பெருமாள் கோவில்சேரவுமுன் வைத்திட
மருவலிச்சுரமகன்று மாறியோடும் மாண்பிதே.

இதன் பொருள்

மிருகச் சீரிட நட்சத்திரத்தில் நான்கு பாதத்திலும் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் தோன்றினால் அதிக பட்சமாக 9 நாட்களில் காய்ச்சலின் வேகம் குறைந்தாக வேண்டும், குறையாமல் தொடர்ந்து நீடித்தால் அதற்கு சாந்தி பரிகாரமாக வெள்ளை மலரும் உளுந்தும் சேர்த்து நோயாளியின் தலையைச் சுற்றி பெருமாள் கோவிலின் முன்னால் வைத்துவிட வேண்டும். இவ்வாறு செய்தபின் காய்ச்சல் வேகமாக குறைந்து துரிதமான நலம் கிட்டும்.

திருவாதிரை நட்சத்திரம்

திருவாதிரை நட்சத்திரத்தில் 1-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் 9 நாளைக்குள் குணமாகும். 2-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் தோன்றினால் உடல்நிலை மிகவும் பேராபத்தை

அடையும். 3-வது பாதத்தில் ஏற்பட்ட காய்ச்சலானது படிப்படியாக கடுமையான நிலை அடைந்து 10-வது நாளி லிருந்து காய்ச்சல் வேகம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே வரும். 4-ம் பாதத்தில் தோஷ ஜுரம் தோன்றினால் 15 நாட்கள் வரை தீவிரமான நிலை யில் இருக்கும். பிறகு படிப்படியாக ஜுர வேகம் இறங்கத் தொடங்கும்.

இந்த நட்சத்திரக்காரர்களுக்கு பொதுவாக காய்ச்சல் நிலை கடுமையாக இருப்பினும் கீழ் குறித்தவாறு பரி காரம் செய்தால் சுர வேகம் மாறி உடல் நலம் பெறும்.

சாந்தி பரிகாரம்

ஆதிரையிற் காண்சுரமு - மைந்து நாளையில் விடும்
வாதித்துடாதாகில் மரண மிருபத்தைந்தில்
வேதித்துப் புதன் வியாழன் வெள்ளி சனியில் பகல்
ஓதியே பரமான்னமுடையவர் கோயில் முன்வையே

இதன் பொருள்:

திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் தோன்றினால் சாதாரணமாக 5 நாட் களில் குணமாகிவிடக் கூடும். அவ்வாறில்லாமல் காய்ச்சல் 25 நாட்கள் வரை தொடர்ந்தால், நீடித்தால் அவர்கள் உயிராபத்தான நிலையை அடைவார்கள் என்பது விதி. ஆனால் கீழ்க்கண்டவாறு சாந்தி பரிகாரம் செய்தால் மரண பயம் அகன்று உடல் நல்ல நிலையை அடையும்.

வாரத்தில் புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய இந்த நாட்களில் பகல் உச்சி நேரத்தில் பரமான்னம் மந்திரித்து பாதிக்கப்பட்டவர் தலையைச் சுற்றி சிவன் கோவில் முன் வைத்திட தோஷக் காய்ச்சல் முற்றிலுமாக விலகும்.

புனர்பூச நட்சத்திரம்

இந்த நட்சத்திரத்தில் 1-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் 7 நாட்களில் குணமாகும். 2-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் காய்ச்சலானது 10 நாட்களில் குணமாகும். 3-ம் பாதத்தில் ஏற்படும் காய்ச்சலானது 18 நாட்கள் வரை மிகத் தீவிரமான நிலையில் ஆபத்தை தோற்றுவிக்கும் வகையில் இருக்கும். 4-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் உடனே மரணம் ஏற்படவேண்டும் என்பது விதி. என்றாலும் தகுந்த சாந்தி பரிகாரம் செய்வதன் மூலம் விதியை மாற்றியமைத்து நலம் காணமுடியும்.

சாந்தி பரிகாரம்

புனர்பூசமுதித்த காய்ச்சல் போகுமுன்றா நாளல்லது
தனித் திருபத்தோர் நாளிற்—றான் விலகிப் போகாதேல்
முனிந்ததுமே காயமுஞ் சோறுமுன் பெருமாள்கோயிலில்
கனிந்துமேவைக்கச் சுரமுங் காணாதோடுங்கானனே.

இதன் பொருள்

பூனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் அதிகபட்சமாக 21 நாட்களுக்குள் காய்ச்சலின் வேகம் குறைந்து உடல் நலமாக வேண்டும். அவ்வாறு நலமாகாவிட்டால் பெருங்காயம் கலந்த சோற்றை பிணியாளரின் தலையைச் சுற்றி பெருமாள் கோவிலின் முன் வைத்துவிட்டு வரவேண்டும். உடனடியாக பலன் கிடைக்கும்.

பூச நட்சத்திரம்

பூச நட்சத்திரத்தில் 1-ம் பாதத்திற்குரியோருக்கு தோன்றிய காய்ச்சல் 7 நாட்களுக்குள்ளும், 2-ம் பாதத்திற்குரியோருக்கு 12 நாட்களிலும், 3-ம் பாதத்துக்குரியோ

ருக்கு 19 நாட்களிலும், 4-ம் பாதத்திற்குரியோருக்கு 22 நாட்களிலும் காய்ச்சல் குணமாக வேண்டும்.

உண்மையில் பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் அபாயகரமான நிலையை அடைவதில்லை. தானாகவே குணமாகிவிடும். ஆகவே இதற்கு தோஷப் பரிகாரம் செய்யவேண்டிய அவசியம் இல்லை.

இதனை விளக்கும் பாடல்

பூசத்திலுதித்த சுரம்போகாதேல் பொல்லாங்கிலை
நேசத்திலுதித்தபோதே நெட்டாமலே நின்றிடும்
பாசத்திலுதித்தற்குப் பாங்கொனறுஞ் சாந்தியிலை
தேசத்திலுதித்த நோய்க்குச் சேதமில்லாதேகுமே.

ஆயில்ய நட்சத்திரம்

ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்தவருக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் 9 நாட்களிலும், 2-ம் பாதத்துக் குரியவருக்கு 12 நாட்களிலும், 3-ம் பாதத்துக்குரியவருக்கு 15 நாட்களிலும், 4-ம் பாதத்துக்குரியவருக்கு 20 நாட் களிலும் காய்ச்சல் குணமாக வேண்டும்.

ஆயில்ய நட்சத்திரம் சற்றுக் கடுமையான விளைவு களை உண்டாக்கக் கூடுமாதலால் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சற்று எச்சரிக்கையுடன் இல்லாவிட்டால் மரணாபத்து ஏற்படவும் கூடும். ஆகவே காய்ச்சல் கண்ட உடனே தக்க சாந்தி பரிகாரம் செய்துவிட வேண்டும்.

சாந்தி பரிகாரம்

ஆயிலியந்திலுதித்த வச்சுரமுமற்றா நாட
போயிடாது மூவார் நாட்புகழ் பெறவு நின்றிடுவ
தாயிருந்திடும் புற்றின்மேற் நான்வார்க்கப் பானகம்பால்
நோயது வகன்றிடும் நுணுக்கமான நுட்பமே.

இதன் பொருள்

ஆயில்ய நட்சத்திரத்தில் தோன்றும் காய்ச்சலானது மறுநாளே வேகம் குறைந்துவிட வேண்டும். காய்ச்சல் பல நாட்கள் தொடர்ந்து நீடித்தால்கூட தீவிரமான விளைவுகள் இருக்காது என்றாலும் காய்ச்சல் பதினெட்டு நாட்களுக்கு மேல் தொடர்ந்து நீடித்தால் சாந்தி பரிகாரம் செய்ய வேண்டும்.

வெள்ளிக்கிழமையன்று பாம்பு புற்றுக்குள் பானகமும் பாலும் வார்த்து விட்டு வரவும். காய்ச்சல் உடன் கட்டுக்குள் அடங்கும்.

மக நட்சத்திரம்

இந்த மக நட்சத்திரத்தில் பிறந்தவர் 1-ம் பாதமாக இருந்தால் ஏற்படும் தோஷக் காய்ச்சல் ஒரே நாளில் உயிரை பறித்து விடும் என்பது விதி. 2-ம் பாதமாக இருந்தால் 10 நாட்களிலும் 3-ம் பாதமாக இருந்தால் 15 நாட்களிலும் காய்ச்சல் குறைந்ததாக வேண்டும். தவறி தொடர்ந்து நீடித்தால் சாந்திபரிகாரம் செய்ய வேண்டும்.

சாந்தி பரிகாரம்

மகத்தினிலுதித்திடுஞ் சுரமாறு மீறார் நாளில்
இகத்தனிற்றிருந்தீரா திரண்டு மாதத்தில் விடும்
அகத்தினிலேயெள்ளுஞ் சோறதைச் சுற்றிச்சுடலையை
சகத்தினிலேயச் சுரமுந் தாண்டியோடுஞ்சன்னியே

இதன் பொருள்

மக நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் 12 நாட்களில் குணம் தெரிந்தாக வேண்டும். தவறினால் 2 மாதங்களில் காய்ச்சல் இறங்கியாக வேண்டும். இறங்காமலிருந்தால் அபாய நிலை ஆகும்.

இதை தவிர்த்து முழுமையாக உடல் நலம் பெற கீழ்க் கண்டவாறு சாந்தி பரிகாரம் செய்யவேண்டும். எள் கலந்த சோற்றை நோயாளியின் தலையைச் சுற்றி மயானக்கரையில் கொண்டு போய் வைத்துவிட்டு வர வேண்டும்.

பூர நட்சத்திரம்

பூர நட்சத்திரத்தில் பிறந்த 1-ம் பாதக்காரருக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் காய்ச்சல் தோன்றிய உடனே உடல் மோசமான நிலையை அடைந்துவிடும். 2-ம் பாதத்தவருக்கு 15 நாட்களில் குணம் தெரியும். 3-ம் பாதத்தவருக்கு காய்ச்சல் 19 நாளில் வேகம் குறையும். 4-ம் பாதத்துக்குரியவருக்கு 12 நாட்களில் குணம் தெரிய வேண்டும்.

பூர நட்சத்திரம் சற்று சிரமத்தை தரக்கூடிய தகை யால் தகுந்த நேரத்தில் தகுந்த பரிகாரம் செய்யவேண்டும்.

சாந்தி பரிகாரம்

பூரத்திலுதித்த சுரம் போகும் நாட்பதினொன்றில்
பாரதில் விடாத தாகில் பருப்புஞ்சோறுஞ் சுற்றியே
சோறதைப் பிடாரிகோயிற் கொண்டு போய்முன்வைத்திட
சீறதாய்ச் சுரமுந்தீர்ந்து செம்மையாவார் திண்ணமே.

இதன் பொருள்

பூர நட்சத்திரத்தில் பிறந்தவருக்கு தோஷக்காய்ச்சல் ஏற்பட்டால் 11 நாட்களில் காய்ச்சல் வேகம் இறங்க வேண்டும். இறங்கத் தவறினால் பருப்பு சாதம் தயார் செய்து நோயாளியின் தலையைச் சுற்றி பிடாரி கோயிலின் முன் வைத்துவிட வேண்டும்.

உத்திர நட்சத்திரம்

உத்திர நட்சத்திரத்தில் 1-வது பாதத்தில் பிறந்தவர்களுக்கு தோன்றும் காய்ச்சல் 6 நாட்களிலும், 2-ம் பாதத்தவருக்கு 10 நாட்களிலும் 3-ம் பாதத்தவருக்கு 12 நாட்களிலும் காய்ச்சல் இறங்க வேண்டும். 4-ம் பாதத்தில் பிறந்தவருக்கு காய்ச்சல் தோன்றினால் உயிராபத்தான நிலையை தோற்றுவிக்கும் என்பது விதி.

இதற்கு சாந்தி பரிகாரமாக கீழ்க்கண்ட நடைமுறையை கையாள வேண்டும்.

சாந்தி பரிகாரம்

உத்திரத் துதித்த சுர மொன்பது நாளில்விடும்
அத்திரம் விடாதாகிலதற்குத் தேனுஞ் சோறுமே
ருத்திரமாய் சீதேவியார் கோயில்முன் வைத்திட
பத்திரமாகச் சுரம்பறந்து போகும் பாரிலே.

இதன் பொருள்

உத்திர நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் ஏற்படுமானால் சாதரணமாக 9 நாட்களில் குணமாக வேண்டும். குணமாகாவிட்டாலும் காய்ச்சலின் வேகமாவது வெகுவாக குறைய வேண்டும். அவ்வாறு குறையாவிட்டால் உடனடியாக சாந்திபரிகாரம் செய்யவேண்டும்.

இதற்கு சாந்தியாக தேனும் சோறும் பிசைந்து நோயாளியின் தலையைச் சுற்றி மாரியம்மன் கோவிலின் முன்னால் வைத்திட உடனடியாக காய்ச்சல் இறங்கும்.

அஸ்த நட்சத்திரம்

அஸ்த நட்சத்திரத்தில் 1ம் பாதத்துக்குரியோருக்கு தோஷக் காய்ச்சல் தோன்றினால் 5 நாட்களுக்குள்ளும்,

2-ம் பாதத்தவருக்கு தோன்றினால் 7 நாட்களுக்குள்ளும் 3-ம் பாதத்தவருக்கு 12 நாட்களிலும், 4-ம் பாதத்தவருக்கு 18 நாட்களிலும் காய்ச்சலின் வேகம் அடங்க வேணடும்.

அவ்வாறின்றி காய்ச்சலின் வேகம் தொடர்ந்து நீடிக்குமானால் கீழ்க்கண்டவாறு சாந்தி பரிகாரம் செய்ய வேண்டும்.

சாந்தி பரிகாரம்

அஸ்தத்தி லுகித்தசுர மாற்றிடுமேழ் நாளினில்
முத்தத்தில் விடாததாகில் முன்பாப்பால் சோறுமே
மொத்ததிற் தலையைச் சுற்றி வூரிற்றுர்க்கை கோயிலில்
வைத்திடச் சுரமுந்திர்ந்து மாறியோடு மங்கனே

இதன் பொருள்

அஸ்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு தோஷம் ஏற்பட்டால் அது மிகக் கடுமையாக இருக்கும், என்றாலும் தோஷக்காய்ச்சல் 7 நாட்களுக்குமேல் நீடிக்க வழியில்லை. தொடர்ந்து நீடிப்பதுடன் அதன் கடுமை அதிகமாக இருந்தால் அது குறித்து கவலைப்பட தேவையில்லை. நோயின் கடுமை நிலை விரைவிலேயே சரியாகிவிடும். இதற்கு பரிகாரம் தேவையில்லை என்றாலும் தக்க மருத்துவ சிகிச்சைக்கு ஏற்பாடு செய்வது நல்லது.

சித்திரை நட்சத்திரம்

இந்த நட்சத்திரத்தில் 1ம் பாதத்தில் பிறந்தவருக்கு தோன்றும் தோஷக்காய்ச்சலானது 3 நாட்களிலும், 2-ம் பாதத்தவருக்கு 5 நாட்களிலும், 3-ம் பாதத்தவருக்கு 8 நாட்களிலும் காய்ச்சல் வேகம் தணிய வேண்டும். தணியா விட்டால் தகுந்த சாந்தி பரிகாரம் செய்ய வேண்டும்.

சாந்தி பரிகாரம்

சித்திரையினிலுதித்த சீதச் சுரம் நாளெட்டில்
நித்திரையினிலே நிற்கும் நிற்காவிடிலங்ஙனே
வத்திரமுஞ் சோறு கறிவைக்கத் தீருமே
சித்திரமெழுதிய கூடத்தில் வைத்துத் தலைசுற்றியே!

இதன் பொருள்

சாதாரணமாக சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் 8 நாட்களுக்குள் காய்ச்சலின் வேகம் குறைந்து விடும் என்பது விதி. அவ்வாறு குறையாமல் தொடர்ந்து நீடிக்குமானால் சாந்தி வஸ்திரத்துடன் சோறும் இறைச்சிக் கறியும் எடுத்து நோயாளியின் தலையைச் சுற்றி தெய்வ திருவுருவப் படங்கள் நிரம்பிய கூடத்தில் வைத்துவிட காய்ச்சல் விலகும்.

சுவாதி நட்சத்திரம்

சுவாதி நட்சத்திரத்தில் 1-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் 3 நாட்களுக்குள் குணமாகும். 2-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு உடனடியாக உயிர் ஆபத்து விளைவிக்கும். 3-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு 7 நாட்களில் குணமாக வேண்டும். 4-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு தோன்றும் தோஷக் காய்ச்சல் 10 நாட்களுக்குள் குணமாகவேண்டும். 10 நாட்களுக்குள் குணம் தெரியவில்லை என்றால் தகுந்த சாந்தி பரிகாரம் செய்ய வேண்டும்.

சாந்தி பரிகாரம்

சுவாதியிலுதித்த சுரம் பத்து நாளினில்
அவாவதிற் தீராவிடிலதற்குச் சோறுபொங்கி
புண்ணாக்குடன்
நிவாசியாயத் தலையைச்சுற்றி நெட்டிச்சுடுகாட்டினில்
திவாகரனெதிரில் வைக்கத்தீருஞ் சுரஞ்சென்றுமே

இதன் பொருள்

சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் 10 நாட்களுக்குள் சாதாரணமாக குணமாக வேண்டும் என்பது விதி. அப்படி குணமாகாமல் நோய் கடுமையான நிலைக்குச் செல்லுகிறது என்றால் சோறு பொங்கி, புண்ணாக்கு கறி பதார்த்தத்துடன் நோயாளியின் தலையைச் சுற்றி சூரியன் உதிக்கும் நேரத்தில் சுடுகாட்டின் மத்தியில் வைத்துவிட வேண்டும்.

விசாக நட்சத்திரம்

விசாக நட்சத்திரத்தில் 1-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் தோஷக் காய்ச்சல் 9 நாட்களிலும், 2-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு 12 நாட்களிலும், 3-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு 18 நாட்களிலும், 4-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு 21 நாட்களிலும் காய்ச்சல் குணமாக வேண்டும்.

இந்த கால அளவுக்குள் குணமாகத் தவறினால் கீழ்க் கண்டவாறு சாந்தி பரிகாரம் செய்ய வேண்டும்.

சாந்தி பரிகாரம்

விசாகத்தி லுதித்தசுரமே யிருபத்தொன்றினில்
பிசாசாகவிடும் விடாதேல் பாரிரைச்சிச் சோறும்
திசாதிசையிற் புன்னை மரத்தின் கீழ் வைத்திட
நிசா நிசஞ்சுரமுந்தீர்ந்து நெட்டியோடுங் காணுமே.

இதன் பொருள்

விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் தோஷக் காய்ச்சல் பொதுவாக 21 நாட்களில் குணமாக வேண்டும். குணமாகத் தவறினால் சோற்றுடன் இறைச்சியை சேர்த்து சமைத்து பாதிக்கப்பட்டவரின் தலையைச்

சுற்றி புன்னை மரத்தின் அடியில் வைத்துவிட்டு வர வேண்டும். உடன் காய்ச்சல் வேகமாய் இறங்கி கட்டுக்குள் வந்துவிடும்.

அனுஷ நட்சத்திரம்

அனுஷ நட்சத்திரத்தில் 1-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் பாதிப்பு அதிகமாக இருக்காது. 2-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு 2 நாட்கள் வரை காய்ச்சல் இருந்தாலும் கடுமை இருக்காது. 3-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு காய்ச்சல் தோன்றுவது போன்ற உணர்வுதான் இருக்குமே தவிர காய்ச்சல் வராது. 4-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு வழக்கத்தைவிட உடற்சூடு கூடியிருக்கும். ஆனால் காய்ச்சல் ஏற்படாது.

ஆகவே அனுஷ நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு சாந்தி பரிகாரம் ஏதும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

இது குறித்து விளக்கம் தரும் பழம்பாடலை கீழே காண்போம்.

விளக்கப் பாடல்

அனுஷத்திற் சுரந்தோன்றி லதற்கொரு பயமில்லை
மனதிற்கேற்ற சாந்தியொன்று வைப்பதுவு மங்கில்லை
தனதுநாட் கெடுவதுவுஞ் சாற்றுதற்கு வேறில்லை
இனமறிந்தளிக்க மருந்தேகிடும் விரைவிலே

கேட்டை நட்சத்திரம்

கேட்டை நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் விளைவு கடுமையாக இருக்கும். 2-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு 6-ம்

நாள் குணமாகும். 3-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு 10-வது நாள் காய்ச்சல் இறங்கும். 4-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு 16-நாள், காய்ச்சலின் வேகம் குறையத் தொடங்கும்.

இந்த நாட்களுக்குள் காய்ச்சல் மட்டுப்படாவிட்டால் சாந்தி பரிகாரம் செய்யவேண்டும்.

சாந்தி பரிகாரம்

கேட்டையிலுதித்த சுரங்கேட்க நாட்பதினாறில்
வீட்டைவிட்டே குமாகாதேல்மிக்க பாலுஞ்சோறுமே
தேட்டையாக சஞ்சுற்றித்தேடித் துர்க்கைகோயில்முன்
போட்டையாகிடிற் சுரம்புரண் டோடும்போதே.

இதன் பொருள்:

கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் பொதுவாக 16 நாட்களுக்குள் குணமாக வேண்டும் என்பது விதி. குணமாகாமல் தொடர்ந்து தொல்லைக் கொடுத்தால் சாந்தி பரிகாரத் திற்காக பாலும் சோறும் பிசைந்து தலைப்பிள்ளைக்காரி கேசத்தை சுற்றி பாதிக்கப்பட்ட நோயாளியின் தலையைச் சுற்றி துர்க்கையம்மன் கோவிலுக்கு முன்னால் வைத்து விட்டு வரவேண்டும். காய்ச்சல் வேகமாக இறங்கும்.

மூல நட்சத்திரம்

மூல நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் தோன்றியவ ருக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் மரண அவஸ்தைக்கு உள்ளாக நேரிடும். 2-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு 1 வாரத்தில் காய்ச்சல் இறங்கும். 3-ம் பாதத்தில் பிறந் தவர்களுக்கு 9 நாட்களில் காய்ச்சல் குணமாகும். 4-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் காய்ச்சல் 11 நாட் களில் குணமாக வேண்டும்.

மேற்கண்ட கால அளவுக்கேற்ப காய்ச்சல் குணமாக வில்லை என்றால் தகுந்த சாந்தி பரிகாரம் செய்ய வேண்டும்.

சாந்தி பரிகாரம்

மூலத்திற் சுரமுந்தோன்றியவோடுநாட் பதினொன்றில்
சீலமாய் மீளுமீளாதேல் செல்லுமெட்டு மாதத்திற்
கோலமாய்ப் பயிறுஞ்சோறுங் கொண்டு சமாதியில்லை
ஞாலத்திற் சுரமகன்று நாடாதோடும் நாணியே

இதன் பொருள்

மூல நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் சாதாரணமாக 11 நாட்களில் குண மாக வேண்டும். குணமாகத் தவறி நோய் கடுமையானால் பயறும் சோறும் தயார் செய்து நோயாளியின் தலையில் சுற்றிக் கொண்டு போய் வயது முதிர்ந்து மரணமடைந்த பெரியவரின் சமாதியில் வைக்க வேண்டும். காய்ச்சல் படிப்படியாக இறங்கி முற்றிலுமாக குணமாகிவிடும்.

பூராடம் நட்சத்திரம்

பூராட நட்சத்திரத்தில் 1-ம் பாதத்தில் பிறந்தவர் களுக்கு ஏற்படும் தோஷக் காய்ச்சல் இரண்டு நாட்களி லேயே குணமாக வேண்டும். 2-ம் பாதத்தில் பிறந்தவர் களுக்கு ஏற்படும் காய்ச்சல் 3 நாட்களில் குணமாக வேண்டும். 3-ம் பாதத்தில் பிறந்தவருக்கு ஏற்படும் தோஷக் காய்ச்சல் 6 நாட்களில் குணமாகும். 4 பாதத்த வருக்கு தோன்றும் காய்ச்சல் 8-வது நாளில் குணமாகும். குணமாகவில்லை என்றால் கீழ்க்கண்டவாறு சாந்தி பரிகாரம் செய்ய வேண்டும்.

சாந்தி பரிகாரம்

பூராடத்துதித்தசுரம் போகுமெட்டாம் நாளினில்
மாராட்டமாக விடாதேல் மாதவனார் கோயில்முன்
சீராட்டமிடதுபர சத்தினின்று தானமும்
பாராட்டித் தர்மமளிக்கப் பற்றருஞ்சுரமதே.

இதன் பொருள்

பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு தோஷம் தொடர்பான காய்ச்சல் ஏற்பட்டால் சாதாரணமாக 8 நாட்களுக்குள் குணமாகிவிடும். அவ்வாறு ஆகத் தவறினால் பெருமாள் கோவிலில் முன்னதாக நின்று இடது பாரிசத்திலிருந்து தானதர்மங்களை செய்திட வேண்டும். தோஷக் காய்ச்சல் விலகி நன்மை ஏற்படும்.

உத்திராட நட்சத்திரம்

இந்த நட்சத்திரத்தில் 1-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் தோஷக் காய்ச்சல் 7 நாளில் தீரும். 2-ம் பாதத்தில் தோன்றியவர்களுக்கு 15 நாட்களில் 3-ம் பாதத்தில் தோன்றியவர்களுக்கு 18 நாளில் குணம் தெரியும். 4-ம் பாதத்துக்குரியோருக்கும் தோன்றும் காய்ச்சல் 22 நாட்களில் குணமாகும். அவ்வாறு குணமாகத் தவறினால் இதற்கென தனிப்பட்ட சாந்தி பரிகாரம் செய்ய அவசியமில்லை. ஏன் எனில் உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் தோஷக் காய்ச்சல் பல நாட்கள் நீடித்தாலும் நோயின் தன்மைகள் கடுமையாக இருக்காது. ஆகவே, சாந்தி பரிகாரம் தேவையில்லை.

இதன் விளக்கப்பாடல்

உத்திராடந் தன்னிலே யுதித்த சுரமிரு
இருபத்திரெண்டு நாளினிற் தணிந்திடுமெளிதினில்

பக்திகொண்டு சாந்திசெய்து பாவிப்பது மொன்றிலை
சித்தியாக வொத்திடாது தீருஞ்சுரஞ்சென்றுமே.

திருவோண நட்சத்திரம்

திருவோண நட்சத்திரத்தில் எந்த பாதத்தில் பிறந்து இருந்தாலும் அவர்களுக்கு ஏற்படும் தோஷக் காய்ச்சல் பெயரளவுக்குத்தான் இருக்குமே தவிர மிகக் கடுமையான விளைவுகளை உண்டாக்காது. ஆகவே இதற்கு சாந்தி பரிகாரம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

அவிட்ட நட்சத்திரம்

இந்த நட்சத்திரத்தில் எந்த பாதத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஏற்படும் தோஷக் காய்ச்சல் குறைந்த பத்துபட்சம் நாட்கள்வரை கடுமையாக இருக்கும். நோய் குறைந்து குணமாக சாந்தி பரிகாரமாக தயிறும் சோறும் பிசைந்து நோயாளியின் தலையைச் சுற்றி அந்தணர்களுக்கு தானம் செய்ய வேண்டும். நோய் குணமாகும்.

பூரட்டாதி நட்சத்திரம்

பூரட்டாதி நட்சத்திரத்தில் எந்த பாதத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஏற்படும் தோஷக் காய்ச்சல் 12 நாட்கள் வரை மிகக் கடுமையாக இருக்கும். இதன் வேகத்தைக் குறைத்து காய்ச்சல் முற்றிலுமாக குணமாக்கிக் கொள்ள பரிகாரமாக பாலும், சோறும் தயார் செய்து நோயாளியின் தலையைச் சுற்றி பிள்ளையார் கோவிலின் முன்னே வைத்துவிட்டு வர வேண்டும். தோஷக் காய்ச்சல் குறைந்து முழுமையாக குணமாகும்.

உத்திரட்டாதி நட்சத்திரம்

இந்த நட்சத்திரத்தில 1-ம் பாதத்தவருக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் 7 நாட்களுக்குள் காய்ச்சல் குண மாக வேண்டும். 2-ம் பாதத்தவர்களுக்கு 12 நாட்களுக் குள் காய்ச்சல் குணமாக வேண்டும். 3-ம் பாதத்தவருக்கு 14 நாட்களில் குணமாக வேண்டும். 4-ம் பாதத்தவருக்கு அதிகப்படியாக 16 நாட்களுக்கு காய்ச்சல் குறைந்தாக வேண்டும். குறையாமல் நீடித்தால் தயிரும், சோறும் பிசைந்து நோயாளியின் தலையைச் சுற்றி சிவன் கோவி லின் முன்பு வைத்துவிட வேண்டும்.

ரேவதி நட்சத்திரம்

இந்த நட்சத்திரத்தில் 1-ம் பாதத்தில் பிறந்தவர் களுக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் உடல் உயிரா பத்தை உண்டாக்கும் 2-ம் பாதத்தில் தோன்றியவருக்கு தோஷக் காய்ச்சல் ஏற்பட்டால் 3 நாட்களில் குணமாக வேண்டும், 3-ம் பாதத்தவருக்கு காய்ச்சல் ஏற் பட்டால் 6 நாட்களில் குணமாக வேண்டும். 4-ம் பாதத் தில் பிறந்தவர்களுக்கு 8 நாட்களில் குணமாக வேண்டும். குணமாகத் தவறினால் தகுந்த சாந்தி பரிகாரம் செய்ய வேண்டும்.

சாந்தி பரிகாரம்

ரேவதியில் நோய்சுரமும் நேரிலெட்டு நாளினில்
போவதும் போகாவிடிற் புகழாய்பால் சோறுசுற்றியே
ஈவது நற்சித்திரமெழுதிய மண்டபத்தில்
ஆவதுமேல் வைத்திட வகலுஞ் சுரமங்கனே.

இதன் பொருள்

ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்குத் தோன்றும் தோஷக் காய்ச்சல் 8 நாட்களில் குணமாகவில்லல என்

றால் பாலும் சோறும் கலந்து நோயாளியின் தலையைச் சுற்றி தெய்வங்களின் திருவுருவப் படங்கள் நிறைந் திருக்கும் மண்டபத்தில் வைத்துவிட வேண்டும். தோஷக் காய்ச்சல் முற்றிலுமாக குணமாகும்.

கட்டிகள்–பிளவைகள் உடைந்து குணமாக

பல்வேறு காரணங்களால் உடலில் கட்டிகள், பிளவைகள் ஏற்படுகின்றன. இதே போன்று சிலந்தி களும் அரையாப்பு போன்றவையும் ஏற்படுகின்றன.

இந்தக் கட்டி வகைகள் விரைவாகப் பழுத்து உடையா விட்டால் பாதிக்கப்பட்டவர்கள் தாங்க இயலாத குத்தல் வலியுடன் வேதனைப்பட வேண்டியிருக்கிறது.

இத்தகைய கட்டிகளை மிகத் துரிதமாக பழுத்து உடையச் செய்வதற்கு சில மந்திரங்கள் உள்ளன.

இந்த மந்திரங்களில் ஒன்றினை இப்போது சிந்திப் போம்.

மந்திரம்

ஓம் பாலசுப்பிரமணியா வைரவ நாதா. உன் பாதம் வந்தடி பணிந்தேன்!

சூரா சூலத்தாலே சூரனை வதைத்த சூர சங்கரா!

கால காலா, காலனை உதைத்த கால கண்டா!

கண்டமாலை, கருணை மூலம் தொடை வாழை அக்குள் சிலந்தி அரையாப்பு, முலைச்சிலந்தி பக்கப்பிளவை, எரிப்பிளவை நட்புச் சிலந்தி, கண்டமாலை கரைந்து கரைந்து ஆலகால விஷம் கக்கினாற் போல!

அந்நீர் வற்றி, செந்நீர் வற்றி!
வீக்கம் வற்றி, வெதிர்ப்பு வற்றி!
உலர்ந்து கலந்து பொரிந்து போக சுவாஹா!

இந்த மந்திரத்தை 1008 முறை மனத்தை ஒருநிலைப் படுத்தி உருவேற்றி ஜெபிக்க வேண்டும்.

இந்த மந்திரத்தை 1008 முறை உருப்போட்ட பின்னர் வேப்பிலை, அல்லது விபூதி கைக்கொண்டு ஒன்பது முறை ஓதி வேப்பிலை கொத்தினால் கட்டியின் மீது தடவிக் கொடுத்தோ விபூதியை ஊதவோ செய்தால் கட்டிகள் உடைந்து-அல்லது கரைந்து உடலுக்குள் அழுந்திவிடும்.

மந்திரத்தை அதிகாலை—மாலை நேரங்களில் வேப்பிலைக் கொத்து முனையினால் தடவியவாறோ, விபூதியை தூவியவாறோ மூன்று நாட்கள் ஜெபித்தால் கட்டிகன் உடைந்து-அல்லது அழுந்தி வேதனை குண மாகும்.

தேள் கொட்டிய விஷம் இறங்க மந்திரம்

தேள் கொட்டி விஷம் ஏறி அவதிப்படுவோரின் வேத னையை அகற்றி தேள் விஷத்தை இறக்குவதற்கான மந்திரம்.

தேள் கொட்டிய பதினைந்து நிமிஷங்களுக்குள் மந்தி ரத்தால் துரிதமான குணம் தெரியும். சற்று தாமதமாகி யிருந்தால் மந்திரத்தின் உரு எண்ணிக்கையை அதிகப் படுத்த வேண்டியிருக்கும்.

ஓம் வஞ்சக்காலும் வடித்த மூக்கும்....
வரு கணப்பிள்ளை யார் தண்டையும் சதங்கையும்....
கருமலைக்கும் செம்மலைக்கும் அப்புறத்திலே....
கன்னிப் புத்தூரிலே கருந்தேளும் செந்தேளும்
கலந்து பறந்திருக்கும்....
ஓணாணும் தேளும் ஒரு மரத்திலேற,
ஓணாணேற தேளிறங்க ஓம் காளி இறங்கிவா!

ஆகாச வாணி இறங்கிவா!
உன்னையும் என்னையும் படைத்த பிரம்மா
ஆணையாய் இறங்கி வா!
பாசி படர்ந்த பன்னிராயிர மந்திரத்தேளே படு
படு! பற பற!
வெள்ளாட்டித் தேளே வினாவியே படு படு!
உக்கிரம் நீங்கி இறங்கி வா! இறங்கி வா!

இந்த மந்திரத்தை வேப்பம் ஈர்க்கு அல்லது துடைப்ப ஈர்க்கு இரண்டினை கைக்கொண்டு தேள் கொட்டிய இடத்தில் மேலிருந்து கீழ்ப்புறமாக வழித்தவாறு 1008 உரு ஜெபிக்க படிப்படியாக தேள் விஷம் இறங்கி வந்து கடைசியாக வேதனை முற்றிலும் அடங்கும்.

விருப்பம் போல திருமணம் நடைபெற

ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் சரியான காரணம் இல்லாமலே அவர்களுடைய திருமணம் தள்ளிப் போய்க் கொண்டேயிருக்கும். சில ஆண்கள் அல்லது பெண்கள் தாங்கள் விரும்பியவரைத் திருமணம் செய்துக் கொள்ள இயலாதவாறு இடையூறுகள் ஏற்படும்.

மேற் சொன்ன நிலைமையினை மாற்றி அமைத்து திருமணம் காலத்தோடு நடைபெறவும், விரும்பியவர்களையே மணந்து கொள்ளவும் உதவும் மந்திரங்கள் உள்ளன.

இவற்றில் குறிப்பிடத் தக்கது—'சுயம்வர மோகினி' மந்திரமாகும்.

மந்திரம்

''ஓம் ஐம் ஹ்ரிம் யோகினி
யோகினி யோகேசுவரி, யோக
பயங்கரீ, சகல ஸ்தாவர
ஜங்கம முகஹ்ருதயம்
மமவசம் ஆக்ருஷ்ய
ஸ்வாகா''

வெள்ளிக்கிழமை அந்தி நேரத்தில் நீராடி பரிசுத்த ஆடை அணிந்து முறைப்படி அனுஷ்டானங்களை முடித்துக்கொள்ள வேண்டும்.

அறையை தூய்மையாக பெருக்கி மெழுகிக் கோலமிட வேண்டும்.

திருவிளக்கு ஏற்றி வைத்து அதற்கு மலர்சூட்டி மஞ்சள் குங்குமம் இடவேண்டும்.

அடுத்து கும்பம் ஸ்தாபிக்க வேண்டும்.

பொங்கல் வடை படைத்து தூப தீபம் காண்பித்து மேற்சொன்ன மந்திரத்தை 1008 முறை உருவேற்றி உற்சாடனம் செய்யவேண்டும்.

பின்னர் பூசையில் வைக்கப்பட்ட திருநீறு, குங்குமத்தைப் பலனடைய வரும் ஆண்-அல்லது பெண்ணுக்கு அளித்து அதில் ஒரு சிட்டிகை வாயிலிட்டு நெற்றிக்கும் இட்டுக் கொள்ளச் சொல்ல வேண்டும்.

சுளுக்கு அகல மந்திரம்

என்ன காரணத்தால் உடலின் எந்த உறுப்பில் சுளுக்கு ஏற்பட்டிருந்தாலும் இந்த மந்திரத்தை 1008 முறை உருவிட்டு உற்சாடனம் செய்யவேண்டும்.

மந்திரம்

ஓம் அண்ட முருக,
ஆகாச முருக, சூல முருக
சுடுகாடும் உருக, இங்கு
சுளுக்கினால் ருத்திரன்
விடு விடு நடு விடு போக
விடு விடு சுவாஹா

எந்த நிலையில் எந்த இடத்தில் சுளுக்கு ஏற்பட்டதோ அந்த இடத்து மண்ணை கைப்பிடி அளவு எடுத்து சுளுக்கி யுள்ள இடத்தில் உதிர்த்தவாறே மந்திர உரு உச்சாடனம் செய்யவேண்டும். பிறகு சுளுக்கிய இடத்தினை கை யினால் மூன்று தடவை மேலிருந்து கீழாக இறக்கிவிட வேண்டும்.

இவ்வாறு மூன்று நாட்கள் செய்ய சுளுக்கு முற்றிலு மாக அகன்று விடும்.

கல்வியில் தேர்ச்சியும் உயர் பட்டங்களும் பெற

கல்விப் பயிற்சி யாதாக இருப்பினும் அதில் தங்கு தடையற்று தொடர்ந்து தேர்ச்சி பெற்று உயர்ந்த பட்டங் களை எளிதாகவும் நிச்சயமாகவும் பெறுவதற்கு கலை மகள் பூஜா யந்திரத்தைப் பயன் படுத்தவேண்டும்.

இசை, நாடகம், திரைப்படத்தில் நடிப்பு போன்ற துறைகளில் உச்ச நிலைக்குச் சென்று புகழ், செல்வம் பெற்று வாழவும் இந்த யந்திரம் நம்பிக்கையாக உதவி செய்யும்.

கலைமகள் பூஜா யந்திரத்தின் உருவ வரைவுப்படம் கீழே தரப்பட்டிருக்கிறது.

இந்த மந்திரத்தை ஜபிக்க அதிகாலை நேரமே உகந்ததாகும்.



கலைமகள் பூஜா யந்திரத்தை வெள்ளித் தகட்டில் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும்.

அதிகாலையில் நீராடி உடல்—மனத்தைப் புனித நிலையில் வைத்துக் கொண்டு புத்தாடை உடுத்தி யந்தி ரத்தை பூஜையில் வைக்க வேண்டும்.

தேங்காய், பழம், அவல் கடலை, கடலைச் சுண்டல், பாயசம் ஆகியவற்றை நிவேதனப் பொருளாகப் படைக்க வேண்டும்.

தூப, தீப கற்பூர ஆரத்தி காண்பித்து, கீழ்க்கண்ட மூல மந்திரத்தை 1008 முறை உருவிட வேண்டும்.

மூல மந்திரம்

''ஹரி ஓம், ஐயும் கிலியும் சௌவும் வாக்கில் ஆசனீ வா வா! நசிமசி வா வா! கலாதேவி வா வா! என் நாவினில் நினது சக்தி அருள் விளையாட அருள்செய் அங் கிங் வங் சுவாஹா.''

பதவி உயர்வுக்கு

நீண்ட காலமாக பதவி உயர்வு இன்றி தேக்க நிலையில் இருப்பவர்கள் பதவி உயர்வு பெற, இலக்கிய கலைத் துறையில் மேன்மை நிலை அடைய, செய்யும் தொழில் அபிவிருத்தி அடைய கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமணம் நடைபெற மற்றும் இது போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண கலைமகள் யந்திரம் பேருதவி புரியும்.

திருமகள் பூஜா யந்திரத்தின் அமைப்பு முறை கீழே தரப்படுகிறது.

கிழக்கு முகமாக வாசல் உள்ள அறையை நன்கு சுத்தம் செய்து மெழுகிக் கோலமிட வேண்டும்.

ஐந்து முகமுள்ள குத்து விளக்கினை ஏற்றி வைக்க வேண்டும். தாம்பூலம், பழம், கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்தி, சந்தனம், மஞ்சள் தூள், குங்குமம் ஆகியவற்றை தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

கலைமகள் பூஜா யந்திரத்தை வெள்ளித் தகட்டில் வரைந்துக்கொள்ள வேண்டும்.

பூஜை நடைபெறும் நாள் வெள்ளிக்கிழமையாக இருப்பின் உத்தமம்.

யந்திரத்தை பால் கொண்டு அபிஷேகம் செய்து கொள்ள வேண்டும்.

சுண்டல், வடை, பொங்கல், பாயசம் ஆகியவற்றை நிவேதனப் பொருளாக சமர்ப்பிக்க வேண்டும்.

விளக்கு ஏற்றி தூப தீபம் காண்பித்து, தேங்காய் உடைத்து நைவேத்தியம் செய்ய வேண்டும்.

முதலில் பூஜை எந்தவித விக்கினமும் இன்றி நிறைவேற கீழ்க்கண்ட மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.

''ஹரி ஓம், அஸ்யஸ்ரீ ஆத்யாதீ ஸ்ரீ மகாலட்சுமி மந்திரஸ்ய பார்க்கவ ரிஷி அனுஷ்டுப் சந்தசம் ஸ்ரீ ஆத்யாதி ஸ்ரீ மகாலட்சுமி சகித ஸ்ரீம் பீஜம் சக்தீ ஐம் கீலகம ஆத்யாதி ஸ்ரீ மகாலட்சுமி தேவதா பிரசாத ஸித்யர்த்தே ஜெபே வினியோக ஹா.''

இதனை அடுத்து மூல மந்திரத்தை 1008 முறை பக்தியுடன் உச்சாடனம் செய்ய வேண்டும்.

மூல மந்திரம் வருமாறு:

''ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் மகாலட்சுமி கமலதாரண்யை ஸ்வாஹா.''

இந்த மந்திர யந்திர பூஜையினைத் தொடர்ந்து 38 வாரங்கள் செய்து வந்தால் எத்தகைய கொடிய வறுமையில் வாடுபவர்களும் பெருஞ் செல்வம் பெற்று உயர்நிலையடைவார்கள்.

சுகப் பிரசவத்திற்கு எண்ணெய் மந்திரித்துக் கொடுத்தல்

பெண்களுக்கு ஏற்படும் பிரசவம் ஒரு வாழ்க்கைப் பிரச்சினையாக இருக்கிறது. நவீன மருத்துவ வசதிகள்

பெருகியுள்ள இந்தக் காலத்தில் கூட பிரசவம், பெண்களுக்கு முழு அளவுக்குப் பாதுகாப்பை அளித்து விட்டதாகக் கூறுவதற்கில்லை. சுகப் பிரசவத்துக்கு உறுதுணையாக எண்ணெய் மந்திரித்துக் கொடுக்கலாம்.

இதற்கான மந்திரம் வருமாறு:

''இந்திரன் விழுதப் புழுதி, எமன் இறைத்த எள்ளு, மந்திரக் குடத்து எண்ணெய், மாமரத்துப் பிள்ளையார் எண்ணெய், காளி தந்த எண்ணெய், காளிதூதர் தந்த எண்ணெய், இவ்வெண்ணையைக் கொண்டு மார்பில் தடவ குளிநிற்க. மலக் குடலும் பிள்ளையும் குத்திக் கிளறி கால் கடல் வந்து வீழச் சுவாஹா.''

பிரசவ நேரத்தில் பிரசவம் இயல்பாக இராமல் சிக்கலுடன் தாய்க்கு வேதனையுண்டாக்குமானால் ஒரு செப்புக் கிண்ணத்தில் சிறிது விளக்கெண்ணெய் ஊற்றி அதில் அருகம்புல்லை பிடித்துப் போட்டு சுழற்றிக் கொண்டே மந்திரத்தை உச்சாடனம் செய்ய வேண்டும். மந்திரம் நிறைவடையும் தருணம் வாயினால் மூன்று முறை ஊத வேண்டும்.

இந்த நிலையில் பிரசவ வேதனைப்படும் பெண், வேதனை குறைந்து நிம்மதி அடைவாள். தொடர்ந்து பிரசவம் சுகமாக அமையும்.

மந்திரிக்கப்பட்ட எண்ணெயில், அருகம்புல்லை நன்றாக நனைத்து புல்லை மேலே தூக்கிப் பார்க்க எண்ணெய் தெளிவாக இறங்குமானால் பிறக்கும் குழந்தை ஆணாக இருக்கும். எண்ணெய் குழம்பாக இறங்கினால் குழந்தை பெண்ணாக இருக்கும்.

அவர்கள் இங்கே ஒரு விஷயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எண்ணெய் மந்திரிப்பதனாலேயே பிரசவ நிலையில் இருக்கும் பெண்ணுக்கு தற்கால நவீன சிகிச்சை முறை அளிக்கக் கூடாது என்று எண்ணாதீர்கள். இந்த மந்திர எண்ணெய் ஒரு உபசாந்திதான்.

கடிக்க வரும் நாயின் வாயைக் கட்ட

சாலையில் நடந்து செல்லும் போது தற்காலத்தில் பலவிதமாக நாய்களின் தொல்லைகளை அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

நாய் கடித்துவிட்டால் அதன் விளைவு மிகப் பயங்கர மாக இருக்கும். தகுந்த சிகிச்சை அளிக்காவிடில் கடி பட்ட மனிதன் நாய் போலவே குரைத்துக் குரைத்து உயிர் விட்டு விடுவான்.

சாலையில் நடந்து செல்லும்போது சற்றும் எதிர் பாராத நிலையில் ஒரு நாய் கடிக்க ஓடி வருகிறது என் றால் அப்போது தற்காத்துக் கொள்ள வழியேதும் இருக் காது. அந்த மாதிரி சமயங்களில் மந்திரத்தின் மூலம் கடிக்க வரும் நாயின் வாயைக் கட்டி அதைச் செயலிழக்கச் செய்துவிட முடியும்.

சற்றும் எதிர்பாராத நிலையில் நாயின் தாக்கு தலுக்கு உள்ளாக நேர்ந்தால் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள மந்திரத்தை முழு வேகத்துடன் திரும்பத் திரும்ப உச்சரித் தவாறு தெரு மண்ணில்ஒரு சிட்டிகை எடுத்து நாயின்மீது வீச நாய் திகைத்து குரைப்பதை நிறுத்திவிடும். அதாவது குரைக்கும் சக்தியையே அது இழந்து விடும். அடுத்த ஒரு வாரம் வரை நாய் குரைக்காது, இரையெடுக்காது. குன்றிப் போய் ஒடுங்கிக்கிடக்கும். நாயின் வாய்க்கட்டு மந்திரம் வருமாறு:

''ஓம் பைரவா! ஆகாச பைரவா! அண்டாண்ட
பைரவா!
இந்திர பைரவா! அமரரும் தயங்குகிறார்; அடியேன்
மனதும்
தயங்குகிறது. எதற்குக் குரைக்கிறாய், குரைக்காதே
குரைத்தால் அரண்மீது ஆணை; அகஸ்தியர் மீது
ஆணை
ஓம் ஹீம் பட் சுவாஹா.''

இது போல 1008 முறை செபித்து உருவேற்றிக் கொள்ளவும்.

வாய்க்கட்டு மந்திரத்தின் மூலம் செயலிழக்கச் செய்த நாயை மீண்டும் இரை எடுக்கவும் குரைக்கவும் இயல்பாக செயல்படவும் செய்ய அதன் வாய்க்கட்டு மந்திரத்தாலேயே அவிழ்க்க வேண்டும்.

அந்த மந்திரம் வருமாறு

''யானிட்ட ஆணையும் உன்னைக் கட்டிய கட்டும்
வாய்க்கட்டும் அறுக்க, வட்டதுட்ட பகவானே,
கட்டுப்பட்ட
மிருகமெல்லாம் கட்டி விட்டேன். விட்டேன். விட்டேன்:
ஓம் நம சிவாய''

இவ்வாறு 1008 முறை செபிக்கச் சித்தியாகும்.

நாய்க்கட்டை நிவர்த்தி செய்யும்போது மந்திரம் சொல்லி முடிந்த பின் மஞ்சள் நீரை நாயின் முகத்தில் தெளிக்க வேண்டும். இவ்வாறு மந்திரம் ஓதி மும்முறை மஞ்சள் நீர் தெளித்து நாயின் தலையிலிருந்து முதுகை தடவி கொடுத்தால் நாயின் வாய்க்கட்டு நீங்கி அதன் இயல்பான நிலையை அடையும்.

சகல சித்திகளும், சக்திகளும் பெறுவதற்கான மந்திரம்

இயற்கையாக நமக்கு என்ன சக்தியும், வலிமையும் இருந்தாலும் எப்போதுமே அது பயன்படும் என்று கூற முடியாது. ஏதோ ஒரு வகையில் நாம் பலவீன நிலையில் இருந்தால் நம்முடைய சக்தியும் வலிமையும் பயன்படாமலே போய் விடக்கூடும். இதற்கு மாறாக மந்திர சக்தியின் மூலம் நம்முடைய சுய சக்தியை வளர்த்துக் கொண்டோமானால் எந்த நிலையிலும், எந்த நேரத்திலும் நம்முடைய சக்தியை பிரயோகித்து வெற்றி காண முடியும்.

இவ்வாறு நாம் மந்திரத்தின் மூலம் சுய சக்தியை வளர்த்துக் கொண்டோமானால் நாம் சொல்லும் வாக்கு சொன்னபடியே பலிக்கும். நோயாளிக்கு நாம் அளிக்கும் விபூதியை பூசினாலே நோய் அகன்று விடும். நம்மை எதிர்க்க வருபவர்கள் எவ்வளவு பலசாலியாக இருந்தாலும், எவ்வளவு வசதி படைந்தவர்களாக இருந்தாலும் நம்முடைய கண் பார்வையைக் கொண்டே அவர்கள் சக்தியை ஒடுக்கி விட முடியும்,

இந்த மந்திரத்திற்கு உதவக்கூடிய சண்டேஸ்வரி யந்திரம் ஒன்றையும் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

சண்டேஸ்வரி யந்திரத்தின் மாதிரி உருவம் கீழே தரப்பட்டிருக்கிறது. சண்டேஸ்வரி யந்திரத்தை வெள்ளித் தகட்டில் வரைந்துக் கொள்ள வேண்டும்.

பிறகு அந்த யந்திரத்திற்கு பாலால் அபிஷேகம் செய்து வாசனை திரவியங்களால் அலங்கரிக்க வேண்டும்.

பின்பு, ஓரிடத்தில் தூய்மையாக மெழுகிக் கோலமிட்டு, அதன் மீது கும்பக்கலசம் வைக்க வேண்டும்.



செம்பின் மீது மாவிலை வைத்து, அதன் மீது தேங்காயை வைக்கவும், கலசத்திற்கு நூல் சுற்றி, கலச பூஜை செய்து, விநாயகர் பூஜை செய்து முறைப்படி பிரதிஷ்டை செய்து, இந்த மூல மந்திரத்தை ஓர் இலட்சம் முறை செபித்து உருவேற்ற வேண்டும்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் பிரம்மச்சரிய விரதத்தை நழுவ விடக் கூடாது. ஒருமித்த மனத்துடனும் ஏகாக்கிர சித்தத்துடனும் பயபக்தியுடனும் இந்த மந்திரத்தை செபித்து சித்தியடைய வேண்டும். இவ்வாறு மந்திர-சித்தியை அடைந்து விட்டால், இதனால் ஆகாத செயல் ஒன்றுமில்லை.

ஒவ்வொரு நாளும் பூஜை செய்து முடித்தவுடன், தேவி மஹாத்மியம் பாடம் செய்ய வேண்டும். இது அனுப வத்தில் பயனளிக்கும் சிறந்த மந்திரமாகும். இந்த மந்திரம் சித்தியான பிறகு, மாந்திரீக அஷ்ட கர்மங் களுக்கும் பிரயோக மந்திரத்தை ஜெபித்து பிரயோகம் செய்ய, எதிர்பார்க்கும் பலன்களை உறுதியாக அடைய லாம்.

இதற்கான பூஜா விதிமுறையை இப்போது கூறு கிறோம்.

இந்த பூஜையை செய்வதற்கு பௌணர்மி தினம் உத்தமமானது.

பௌர்ணமி தினத்தன்று மாலையில் நீராடி தூய்மை யான வெள்ளை நிற ஆடைகளை அணிய வேண்டும்.

பிறகு கிழக்குப் பக்கம் வாசலுள்ள தனி அறையை சுத்தம் செய்து பசுஞ்சாணத்தால் மெழுகி கோமயம் தெளித்து கோலமிட வேண்டும்.

ஒரு தலை வாழையிலையைப் பரப்பி, அதில் பச்சரிசி இட்டு, கும்பக் கலசம் வைக்க வேண்டும். அந்தக் கும்பத் திற்கு நூல் சுற்றி, மஞ்சள் குங்குமம் இட்டு, அதன்மீது மாவிலைக் கொத்து வைத்து, அந்த மாவிலையின் மேல் தேங்காயை மஞ்சள் பூசி வைக்க வேண்டுப்.

அந்தக் கும்பத்தை அசோகம், முல்லை, செங்கழுநீர் தாமரை, மாம்பூ ஆகிய ஐந்து வகை மலர்களால் அலங் கரிக்க வேண்டும். பின்பு, பிரதிஷ்டை செய்து, மூல மந்திரத்தை 5000 முறை செபித்து உருவேற்றிக் கொள்ள இந்த மந்திரம் சித்தியாகும்.

இந்த மந்திரத்தை 108 முறை ஜெபித்து, எலுமிச்சம் பழம், மல்லிகைப்பூ, சந்தனம், குங்குமம் ஆகியவற்றில்

ஏதேனும் ஒன்றை பிறரிடம் கொடுத்தால், அதனைப் பெற்றவர் உங்களுக்கு வசியமாவார். நீங்கள் சொன்னபடி யெல்லாம் ஆடுவார்.

இனி மூல மந்திரத்தை தெரிந்து கொள்ளுங்கள்:

''ஓம் நமோ பகவதே காமதேவாய, இந்தராய வசபாணாயா இந்திர சந்திரபாணாயா, க்லசம் க்லீம் சம்மோ ஹனாயாஸ் ஸ; வஸீகரண-பாணாயாகம் பிக் ஹீம் பட் ஸ்வாஹா, க்லீம் நமோ பகவதே காம தேவாயா ஸ்ரீம் சர்வஜன ப்ரீயாய க்லீம் சர்வஜன ஸம் மோஹனாயா ஜ்வல ப்ரஜ்வல ப்ரஜ்வல ஹண ஹண வதவத தபதப ஸம் மோஹாயா சம்மோஹாயா ஜனமமே வசம் குரு குரு ஸீவாஹா.''

திருட்டை கண்டுபிடிக்கும் மந்திரம்

நம்முடைய பொருள் ஒன்று திருட்டு போய் விட்டது என்று வைத்துக் கொள்வோம். அந்த பொருளை யார் எடுத்திருப்பார்கள் என்பதை தீர்மானிக்க முடியாத நிலையில் நமக்கு யார் மீதாவது சந்தேகம் ஏற்பட்டால் அவர்கள் அந்த பொருளைத் திருடி இருப்பார்களா என்பதை தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு ஒரு மந்திரம் உள்ளது.

அந்த மந்திரம் வருமாறு:

''ஓம் மலையாள சக்தி ஓடிவா ஒளிந்து வா, ஆடும் பரமேஸ்வரி உன் ஆணை, திருடனைக் கொண்டு வா, கள்ளனைக் கவர்ந்து வா, வெண்ணீறு தருகிறேன். பொருளை எடுத்தவனை தீமூட்டி வை. திருச்சடையர் ஆணை, உள்ளுக்குக் கொள்ளப் பெருங் குடல், அறுத்து மணிக்குடலறுத்து வயிற்றுப்போக்கு உண்டாக, ஈரல் அற்று இரத்தம் சொரியச் சுவாமி வேல் முருகன் ஆணையாய், கந்தன் ஆணையாய்

கடம்பன் ஆணையாய் நமசிவாய சுவாஹா'' என்று மனத்திற்குள்ளேயே 1008 முறை செபித்து முடிவில் சிறப்புப் பூசை செய்யச் சித்தியாகும்.

நம்முடைய பொருளை யார் திருடி இருக்கக்கூடும் என்று சந்தேகப்படுகிறமோ அவரை நம்முன் நிறுத்தி இந்த மந்திரத்தை 108 முறை செபித்து அவருக்கு விபூதி கொடுக்க வேண்டும். அந்த விபூதியை ஒரு சிட்டிகை வாயில் இட்டு கொள்ளச் சொல்ல வேண்டும்.

உண்மையில் அந்த மனிதர் நமது பொருளை திருடி இருப்பாரானால் அவருக்கு உடனே மயக்கம் வாந்தி, உண்டாகும். மயக்க நிலையில் இருக்கும் அந்த மனிதரே தான் திருடியதை ஒப்புக் கொள்வதோடு திருட்டு பொருளை மறைத்து வைத்திருக்கும் இடத்தையும் காட்டிக் கொடுத்து விடுவார்.

எலிக் கடி விஷம் நீங்க

''ஓம் ஐயுங் கிலியும் சௌவ்வும் பகவதி வா வா! பத்ரகாளி வா வா! ஓங்காரி வா வா! ரீங்காரி வா வா! பயங்கரி வா வா! சர்வ எலிக்கடிகளின் விஷத்தை நீக்கு நீக்கு ஆக்ருஷ்ண, தேவி வங் சிங் நமசிவாயா சுவாஹா'' இந்த மந்திரத்தை 1008 முறை செபித்து உரு வேற்ற மந்திரம் சித்தியாகும்.

இந்த மந்திரம் சித்தியடைந்த பிறகு எவருக்காவது எலி கடித்து விட்டால், சிறு மிளகைக் கையில் எடுத்து, மந்திரத்தை செபித்து ஓதி, கொடுத்து, கால் மண்டலம் அந்த மிளகை மென்று சுவைத்து தின்னச் செய்யவும், பிறகு ஊமத்தை இலையைக் கசக்கிச் சாற்றை அவர் காதுகளில் விடக் குணமாகும். எலி கடித்த இடத்தில் வெறுஞ் சாற்றைப் பிழிந்து விடுதல் வேண்டும்.

பல வித ரோகங்கள் அகல

காரணம் தெரிந்தோ தெரியாமலோ மக்களுக்கு பல விதமான நோய்கள் ஏற்படுவதுண்டு. சில வகை நோய் களுக்கு எவ்வளவு தீவிரமான சிகிச்சை அளித்தாலும் குண மாவதில்லை. குறிப்பாக பலவிதக் கட்டிகள், இரணங்கள் போன்றவற்றை குறிப்பிடலாம். சில பெண்கள் வயது அதிகமாகியும்கூட பருவமடையாமலேயே இருப்பார்கள். இதற்கான காரணமும் விளங்குவது இல்லை. இத்தகைய பெண்களுக்கு மந்திரத்தின் மூலம் துரிதமாக பருவமடை யும் நிலையை அடைய செய்ய முடியும்.

இதற்கான மந்திரத்தை 'நவதுர்கா' மந்திரம் என்று கூறுவார்கள்.

இந்த மந்திரத்தை பிரயோகிப்பதற்கு நவதுர்கா யந்திரம் ஒன்றைத் தயாரித்துக் கொள்ளவேண்டும். இந்த யந்திரம் செப்புத் தகட்டில் எழுதப்பட வேண்டும்.

இந்த யந்திரத்திற்கு அபிஷேகம் செய்து வாசனைத் திரவியம், மலர், சந்தனம் ஆகியவற்றைச் சாந்தி மகா நைவேத்தியம் செய்து மூல மந்திரத்தை 1008 முறைகள் செபித்து உருவேற்ற மந்திர சக்தி உண்டாகும்.

மூல மந்திரம் வருமாறு:

''அஸ்ய ஸ்ரீய நவதுர்க்கா மஹா
மந்த்ரஸ்ய, பகவான் பைரவருஷி திருஷ்டுப்ஸந்து
நவதுர்க்கா, தேவதா ஹ்ராம், பீஜம், ஹ்ரீம்
சலேசம், ஹ்ரும் சக்தி, மம ஸ்ரீ நவ துர்க்கா தேவி
பிரஸாத ஸித்யர்த்தே ஜபேவிநியோக.''

''ஓம் ஹ்ரீம், ஓம் துர்க்காயை மஹிஷா
சுரமர்த்தனி சர்வ சத்ராம் நாசய ஹம்பட்
ஸ்வாஹா.''

இந்த மந்திரத்தை மஞ்சளில் ஜெபித்து, பருவ மடையாத கன்னிப் பெண்ணுக்குக் கொடுக்க பருவமடைவாள். வெண்ணையில் செபித்துக் கொடுக்க மக்கட்பேறு இல்லாதவர்க்கு அப்பேறு உண்டாகும். எண்ணையில் மந்திரித்து ஜெபித்து அந்த எண்ணையை இரணங்களுக்குத் தடவ, கட்டி, கண்டமாலை, புற்றுநோய், பவுத்திரம் முதலிய நோய்கள் குணமாகும். தண்ணீரில் செபித்துக் கொடுக்க விஷத்தினால் ஏற்பட்ட எல்லா நோய்களும் நீங்கும். இந்த மந்திரத்தை முறைப்படி பிழையின்றிச் சித்தி செய்தவர்க்கு எதிரிகளின் பயமே இராது.

கடிக்க வரும் பாம்பை தடைக் கட்டுதல்

நாம் தனி வழியே சென்று கொண்டிருக்கும் போது எதிர்பாராத விதமாக விஷப்பாம்பு ஒன்று நம் மீது பாய்ந்து கடிக்க வருகிறது என்று வைத்துக் கொள்வோம். அந்தச் சமயத்தில் நம்மை தற்காத்துக் கொள்வதற்கு அவசர உணர்வுடன் நடவடிக்கை எடுப்பது சிரமம்.

பாம்பை அடிப்பதற்கு நாம் முயற்சி செய்வதற்குள் பாம்பு நம் மீது பாய்ந்து கடித்து விடக்கூடும்.

இந்த மாதிரி சமயங்களில் மந்திரத்தின் மூலம் பாம்பின் வாயைக் கட்டி அதை பலம் இழக்கச் செய்துவிட முடியும்.

இதற்கான மூல மந்திரம் வருமாறு:

''நீரெரிய, நிலமெரிய, நிலவாழைக் குருத்தெரிய பாம்பெரிய, படமெரிய பாரான முப்புரமெரிய சங்கெரிய, சங்கெரிய, சக்கரந்தானெரிய, கொடி தானெறிய, கொல்லங் கொண்டு வந்தாலும் அலகு திறவாதே. ஆ கெட ஒ கெட ஓ கெட ஓம் படு சுவாகா.''

''வட்டமிட்ட சூரியனே மலையெழுந்த பகவானே, கட்டுபட்ட மிருகமெல்லாம் கட்டிவிட்டேன். ஓம் நமசி வாய நம.''

பாம்பு நம்முன் எதிர்ப்பட்டு நம்மைத் தாக்க பாயும் போது தரையிலிருந்து ஒரு சிட்டிகை மண்ணெடுத்து மந்திரம் ஜெபித்து பாம்பின் மீது போட வேண்டும். அப்போது திகைப்புற்று, பலமிழந்து அடங்கி ஒடுங்கி நின்று விடும்.

அந்த நிலையில் மந்திரத்தின் மூலம் பாம்பின் மீது கட்டப்பட்ட கட்டை அவிழ்க்க வேண்டுமானால் மறுபடியும் ஒரு சிட்டிகை மண்ணெடுத்து மந்திரம் ஓதி பாம்பின் மீது போட பாம்பு இயல்பு நிலை அடைந்து அப்பால் சென்று விடும்.

பகைவரின் கட்டை அறுக்கும் மந்திரம்

நம்முடைய விரோதிகளாக இருக்கும் சிலர் நமக்குத் தொல்லையும் தொந்தரவும் கொடுக்க வேண்டுமென்பதற்காக மந்திர சக்தியின் மூலம் நம்மை 'கட்டி' விடுவார்கள்.

இவ்வாறு கட்டப்பட்டவர் செயல் இழந்து விடுவார். புத்தி பேதலித்தவர் போல் வாய் பிதற்றிக் கொண்டிருப்பார். புத்தி நிதானத்தில் இருக்காது. உணவில் விருப்பம் காண்பிக்க மாட்டார். நாளுக்கு நாள் உடல் மெலிந்து கொண்டு வரும்.

இந்த குறிகள் உள்ளவர்களுக்கு எவ்வளவு சிறந்த மருத்துவ சிகிச்சை அளித்தாலும் அவர்களுடைய உடல் குணமாகாது.

இவ்வாறு மந்திரத்தால் கட்டப்பட்டவர்களை குணமாக்க 'கட்டவிழ்' மந்திரத்தை பயன்படுத்த வேண்டும்.

அதிகாலை நேரத்தில் பாதிக்கப்பட்டவரை நீராட செய்து தூய வெண்ணிற ஆடை அணிவித்து சூரியன் இருக்கும் திசை நோக்கி நிற்கச் செய்ய வேண்டும்.

மந்திரம் ஜெபிப்பவரும் நீராடி புனித ஆடை அணிந்து நெற்றியிலும், மார்பிலும், இரண்டு புயங்களிலும் விபூதி பட்டை அடித்து சூரிய பகவானுக்கு பூஜை செய்ய வேண்டும்.

பிறகு பாதிக்கப்பட்டவரின் முன்னால் நின்று கொண்டு 'கட்டவிழ்' மந்திரத்தை ஜெபிக்க வேண்டும். மந்திரத்தை உருப்போடும் ஒவ்வொரு தடவையும் ஒரு சிட்டிகை விபூதி எடுத்து பாதிக்கப்பட்டவர் மீது ஊதி விட வேண்டும்.

இனி கட்டவிழ் மந்திரத்தை கூறுவோம்.

''ஓம் திருக்கண் வராகி உன் திருமுகத்தழகும்; மயூர நிறமும் மதோன்மஸ்தமும்; அகோர தந்தரமும் குருதித் தாரையும் புணைத்ததோளும்; பரந்த கொங்கையும் கோல வாடையும்; குலாவிய மனமும் பயங்கர வடிவமும் பாதக் கிண்கிணியும்;நேமி நீங்காத திவ்விய கரமும், கடகமின் நாராலும் தாழ்ந்த செங்கரமும் அலமொரு பரிசையணிந்த கரமும் அபாய யுத்தமும் இடியிடித்திடுவது போல எழும்பித் தொனி செய்து சிவனாரிடத்தலடு பஞ்சான்னமும்.

''அன்பரைப் பொழுதில் நேமிக்கிரையீடு நீலியென்றேன் உன்னை நாயேன் தொழுது நவின்று வணங்கிட

''என் பகை தீர்ப்பது; உனக்குப் பாரமில்லாமல் பார்க்குப் பாரம் காப்பதுஉன் கடனே; அட்சரி வராகி மஹரிஷி மகாவீரீ ஓம்ஐம் க்லீம் செளவ்வும் ஆனவளே; ஐங்காரத்து சர்வ லோகமாதாவே, விரைவில் இறங்கு இறங்கு சூத்திர ராங் பராங்கு பராங்கு சிவ உபதேச சிதம்பர நற்தேவீ.

''என்னோடு பகைத்தவன் தலையது கிழிய, மூளை சிதறிட முண்டம் குதித்திட கடித்துக் கடித்து அவன்

ஆவியை உண்டு குருதியைக் கொப்பளித்து குடல் மாலையிட்டு, ஈரலும் சதையும் எலும்பொடு நிணமும் கொடிய காளி தாக்கு தாக்கு இந்தா என்று எடுத்து விருந்திடு

''ஆங்காரத் தீ, அகோர சொரூபி, ஓங்கார அண்ட கோள மசைந்து நடுங்கித் திசைகளும் அசையத் திக்கு கள் மலைகள் எட்டும் கிடுகிடு என்று தீர்ந்திடப் பாதாளம் நடுங்கிட பார்த்தளிக்க மன்னவர் வீற்றிட இராக்கதரோடே இரத்தக் காட்டேரி வீரன் சடாமுனி வேதாள பூதமும்கொடிய பிசாசும் கூறு சாத்தானும் வஞ்சனை பில்லி வைப்பு சூனியமும் எந்திரம் மந்திரம் எத்துகளும் சத்துருப் பகையும் சர்வவியாபியும் நச்சு விஷமும் நடுங்கிக் குத்திட நெருப்பு எழ வீழ்ந்து நீர்த்துளியிட்டு துஷ்ட மிருகங்கள் கடித்துமே வீறிட் டோடி விழுந்து உதிரம் பெருக காலில் சிலம்பு கலகல வன்று வர, அன்பர்கள் வணங்க ஆடிய பஞ்சானனமே.

''ஓம் ஐயும் கிலியும் சௌவ்வும் என்றே உன் பாதம் தொழ என்னைப் பகைத்தவர் அவர் பூண்டொ டொழிய ஓம் வராகி வசியவராகி சிவ வராகி சிவ சமய வராகி ஒடுங்கி ஓடிவா. நசி மசி வாவா சுவாஹா!''

இந்த மந்திரத்தை 1008 முறை ஜெபித்து உருவேற்ற மந்திரத்தால் கட்டப்பட்டிருக்கும் மனிதரின் கட்டு சிறுக சிறுக அவிழ்ந்து இறுதியில் முற்றிலுமாக விடுபடுவார்.

வல்லமைசாலிகளையும் வணங்க வைக்கும் நாற்பது முக்கோண வசிய சக்கரம்

பிறரை வசியம் செய்யும் மந்திரத்தைப் பற்றி முன் பொரு தடவை கூறியிருக்கிறோம் என்றாலும் இந்த வசிய சக்கரம் வேறு விதமானது.

நாம் யாரை வசியம் செய்ய வேண்டுமென்று நினைக்கிறோமோ அவரே ஒரு தேர்ந்த மந்திர சக்தி படைத்தவராக இருந்தால் அவரை வசியம் செய்வது எளிதல்ல. இலேசான மந்திர நடைமுறையை கையாண்டு அவரை வசியம் செய்ய முற்படும் போது நாம் பிரயோகிக்கும் வசிய மந்திரம் சக்தி இழந்துவிடக்கூடும்.

இவ்வாறு நிகழாமல் எதிரியை வசியப்படுத்தி நம் விருப்பம் போல் ஆட்டிப் படைப்பதற்கு இந்த நாற்பது முக்கோண வசிய சக்கரம் பயன்படும்.

இந்த வசிய முறையில் பிரயோகிக்கப்படும் மந்திரம் மிகவும் எளிதாகத்தான் இருக்கும். இந்த சக்கரம்தான் மந்திரத்திற்கு சக்தி ஊட்டும்.

இந்த சக்கரத்தை பஞ்சலோக தகட்டில் வரைந்துக் கொள்ள வேண்டும். பிறகு சக்கரத்திற்கு பால் அபிஷேகம் செய்து பழம் தேங்காய், மணமுள்ள மலர் படைத்து ஊது பத்தி ஏற்றி வைக்க வேண்டும்.

முதன் முதலாக இந்த சக்கரத்தை முன்வைத்து ஜெபிப்பதற்கு சஷ்டி திதி அல்லது விசாக நட்சத்திரம் அமைந்த கால நேரம் சிறப்புடையதாகும்.

சூரிய உதயத்திற்கு முன்னதாக நீராடி சுத்தமான ஆடை அணிந்து உடலெங்கும் விபூதி பூசி சக்கரத்திற்கு எதிராக கிழக்கு முகமாக உட்கார வேண்டும்.

வசிய சக்கரத்திற்கு முறைப்படி நைவேத்தியம் செய்து கையில் உருத்திராட மணி அல்லது படிக மணியைக் கொண்டு மந்திரத்தை 1008 முறை ஜெபிக்க வேண்டும்.

மந்திரம் வருமாறு—

''ஓம்-ஆம்-ரிங்-சிங் சரவணபவாயா - சண்முக சுப்பிரமணி பவாயா சுவாமிநாதாயா-ஸ்ரீ முருகாயா இரகுநாதாயா-சுவாயா நமஸ்து.''

ஜெபித்து முடிந்த பிறகு யாரை வசிய படுத்த நினைக் கிறோமா அவருடைய காலடி மண்ணை ஒரு சிட்டிகை எடுத்து வந்து வசிய சக்கரத்தின் மேல் வைக்க வேண்டும்.

இவ்வாறு மூன்று நாட்கள் செய்துவர எவ்வளவு வசிய சக்தி வாய்ந்த மந்திரவாதியும் நமக்கு அடிமைபட்டு வலிய நம்மை அடைந்து நாம் சொன்ன மாதிரியெல்லாம் ஆடுவார்.

மோகினி வசிய மந்திரம்

மிகவும் எளிதாக பிறரை வசியப்படுத்தும் மந்திரம் இது. இந்த மந்திரத்தை பயின்று சித்தியடைந்தவர்கள்

நெற்றியில் விபூதி அணிந்து நாம் யாரை வசிய படுத்த விரும்புகிறோமோ அவர் முன்னால் நடமாடினாலே வசியப் பட்டு நம் விருப்பம் போல் எல்லாம் செயற்பட ஆரம்பிப் பார்கள்.

இந்த மந்திரத்தில் சித்தியடைந்தவர்கள் எவ்வளவு கடினமான வழக்குகளில் ஈடுபட்டாலும் எளிதாக வெற்றி பெறுவார்கள். இவர்கள் எந்தத் தொழிலை செய்தாலும் வாழ்க்கையில் சுலபமாக முன்னேறுவார்கள். மிகக் கடுமை யான விரோத மனபாவம் கொண்டவர்களும் வலிய வந்து நட்பு கொண்டு நமக்கு இணங்கி நடப்பார்கள்.

இந்த வசிய மந்திரத்தை ஜெபிப்பதற்கு முன்னால் மோகினி சக்கரம் ஒன்றை செப்புத் தகட்டில் எழுதி பூஜை யில் வைக்க வேண்டும்.

சக்கரத்தின் உருவ அமைப்பு கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும்.



வசிய மந்திரம் வருமாறு:

''ஓம் நமோ பகவதி மகாமோகினி ஒங் நங் நம சிவாய நம; இந்திரன் தந்த நீர், இறைவன் தந்த நீர், சூலகபாலி பரமேஸ்வரி தந்த நீர் என்னை விட்டு எதிரே நின்று, என் முகங்கண்ட பேர் எதிரியினிடஞ்

சென்று பல்லுருகி, பாதாளஞ் சிதறவுருகி, காமமுருகி, கட்டுருகி, முன்கைதிருகி, முழங்கால் திருகி, சக்கரத் திருகி, சூலந்திருகி, சுடுகாடுதிருகி, சுடுகாட்டிலி ருக்கும் உத்திரி மேல் திருகி, காளி காளாஸ்திரி எங்கள் திருநீலகண்ட சுவாமி மேலாணை திருகி முருக்கிக் கொண்டோடிவா, காளி, சாமுண்டி, தக்கன் தலையை யறுத்தவளே, கபால சூலந்தரித்த வளே, கடலை மோகினி இன்னார் மேல் கொண்டாடி வா சுவாகா.''

யாரை வசியம் செய்ய நினைக்கிறோமோ அவர் களுடைய பெயரை ஒரு தட்டில் பரப்பி வைக்கப்பட்டி ருக்கும் விபூதியில் எழுதி அதன் மீது மோகினி சக்கரத்தை வைத்து ஜெபிக்க யாருடைய பெயரை எழுதியிருக் கிறோமோ அவர் நமக்கு வசியம் ஆவார்.

திசை கட்டும் மந்திரம்

யாராவது ஒருவர் வாழ்க்கையில் மிகவும் துரிதமாக முன்னேறி குறுகிய காலத்தில் புகழும் பெருஞ்செல்வமும் பெற்று விட்டால் சூழ்ந்திருக்கும் பலர் துவேஷமும் பொறா மையும், கொண்டு அவர்களுடைய நல்வாழ்க்கையை மந்திர தந்திர முயற்சிகள் மூலம் கெடுக்கப் பார்ப்பார்கள்.

இவ்வாறு தொல்லை கொடுப்பவர்கள் யார் என்று தெரியாத நிலையிலும் எந்த பக்கம் இருந்து தொந்தரவு கொடுக்கிறார்கள் என்று தெரியாத நிலையிலும், அவர்கள் மீது மந்திர சக்தி மூலம் நடவடிக்கை எடுப்பது சாத்திய மாக இருக்காது.

இந்த மாதிரி சமயங்களில் நம்மை பாதுகாத்து கொள் வதற்கு நாம் வசிக்கும் இடத்தின் நான்கு திசைகளையும் மந்திர சக்தியினால் கட்டிவிட வேண்டும். இவ்வாறு கட்டி விடுவதால் நான்கு திசைகளில் எந்த திசையிலி

ருந்து யாரும் மந்திர சக்தி மூலம் நம்மை வீழ்த்த நினைத்தாலும் அவர்கள் முயற்சி பலனற்று போய் விடும்.

மந்திரம் இதுதான்—

''ஓம் பைரவி, உத்தண்ட பகவதி, சிங்கவாகினி, சியாமளா தேவியே, அத்திங்கெங்கும் அருள் நடனமாடிடும் அம்பிகா பரமேஸ்வரி, ஆதி பகவதி அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகி, இமாசலப் பார்வதி, ஈசனின் இடப்பாகினி; ஓடிவா, ஓடிவா திசையைக் கட்டு, பில்லி சூனியத்தையும் பிழையறக் கட்டு, எதிரியின் வைப்பு, எதிர்த்திடும் மந்திரம் எத்தனை கோடி என்னை எதிர்ப்பினும் ஏதும் என்னை அணுகாமல், இனிதுடன் கட்டுகட்டு-காலதூதர்கள் கபடமாய் வந்து என்னைக் கதித்து, உயிர் வாங்கினும் சூங்காணன்தேவி, அங்காளஸ்வரூபி, திரிபுரசுந்தரி இங்கிதமாய் இப்போதே கட்டு கட்டு, காற்றையும் நீரையும், தீயையும் கடுங்கோபமுள்ள துஷ்ட தேவதைகளையும் துணிவுடன் கட்டு, ஒண்டி-முனி, உண்டி முனி-இருளன் காட்டேரி, சாத்தன், கறுப்பன் மாடன், சங்கிலி மற்றும் பற்பல துஷ்டத்தனமுள்ள அற்ப தேவதைகளையும் இப்போதே கட்டு, இனிகள்ள தேவி எனக்கருள் புரி புரி சுவாஹா.''

இந்த மந்திரத்தை 108 முறை ஜெபிக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் ஜெபித்து முடித்ததும் உள்ளங்கையில் விபூதியை வைத்து ஒவ்வொரு திசையையும் நோக்கி ஊதிவிட வேண்டும். இவ்வாறு செய்ய நான்கு திசைகளும் மந்திரத்தால் கட்டுப்படுத்தப்பட்டு நமக்கு பாதுகாப்பை அளிக்கும்.

திருட்டை கண்டுபிடிக்கும் கிண்ணி மந்திரம்

ஒரு கிண்ணியைத் தூய்மையாகத் துலக்கி, அதனை பால், இளநீர், கோமயம், தயிர், பன்னீர் ஆகிய ஐந்தை

யும் கலந்து கழுவ வேண்டும். பின்பு அதன் நான்கு பக்கங்களிலும் மஞ்சள் கலசம் வைத்து குங்குமப் பொட்டிட்டு நிவேதனம் செய்ய வேண்டும். அடுத்து அந்தக் கிண்ணியைத் தன் இரு கைப் பெருவிரல்களாலும் அழுத்திப் பிடித்துக் கொண்டு கீழ்க்கண்ட மந்திரத்தைச் செபிக்க அந்தக் கிண்ணி நகர்ந்து கொண்டே சென்று பொருளைத் திருடிய கள்வனைக் காட்டும்.

கிண்ணியைத் தயார் செய்ததும் கீழ்க்காணும் அகோர வீரபத்திர சக்கரத்தை வெள்ளித் தகட்டிலோ செம்புத் தகட்டிலோ வரைந்து, கிண்ணிக்குள் வைத்து அதற்குரிய மந்திரத்தை முறைப்படி செபித்து பூசிக்க, கிண்ணி நகர்ந்து சென்று திருடனை அடையாளம் காட்டும்.



"ஓம் வீரபத்திரா, உத்தண்ட வீரபத்திரா, அகோர வீரபத்திரா, அதிவீரபத்திரா, நூறாயிரங் கோடி சூரியப் பிரகாசமும் நூறாயிரங் கோடி சந்திரப் பிரகாசமும் சங்கொரு கை சக்கரம் ஒரு கை, பாசம் ஒரு கை, உலக்கை ஒரு கை, கலப்பை ஒரு கை, பிடி, ஒரு கை உடுத்திய புலித்தோலும் எடுத்த சொருபமும் கொண்டு கள்வரைக் கண்டுபிடி. பிடி, பிடி மாறு மாறு ஆதித்தனின் பற்களைப் பிடுங்கி கணங் களின் வயிற்றை மீறி அங்கசப் பிரமாணம் செய்து அகோர ரூபம் எடுத்து எங்கு மறைந்திருந்தாலும் கள்வனை கண்டுபிடி. ஆவேசு. ஆவேசு சுவாஹா"

ஒற்றைத் தலைவலிக்கு

"ஓம் முப்பத்து முக்கோடி தேவரின் ஐந்தெழுத் தையும் நான் செப்பத்தகுமோ சிவ சிவா நசி மசி"

இவ்வாறு 1008 முறைகள் ஜெபித்து உருவேற்ற, மந்திர சித்தியாகும். பிறகு, நோயாளியின் தலையைப் பிடித்து, மேற்படி மந்திரத்தை 108 முறை செபிக்கக் கடுமையான தலைவலி நிவர்த்தியாகும். இதுபோலவே மேலும் சில வியாதிகளை இந்த மந்திரத்தைக் கொண்டே குணப் படுத்த முடியும்.

பாலக்கிரக தோஷ சாந்தி முறைகள்

சிறு குழந்தைக்கு, அது பிறந்த முதல் நாளிலிருந்து 12 வது ஆண்டு பன்னிரண்டாவது மாதம் பன்னிரண் டாவது நாள் வரை, ஒவ்வோர் ஆண்டின் அந்தந்த மாத, அந்தந்த நாளில் ஏதேனும் ஒரு நோய் ஏற்பட்டால், அந்த நோய்மிகவும் கடுமையாகிக் குழந்தைக்கு ஆபத்தை விளை விக்கும். இதனைப் பாலக் கிரக தோஷம் என வழங்குவர்.

ஒவ்வொரு குழந்தையும் அது பிறந்த ஆறு ஆண்டுகள் வரையில் அது தன் தாயின் ஜாதக பலத்தாலும், ஆறிலிருந்து 12 ஆண்டுகள் வரையில், அது தன் தந்தையின் ஜாதக பலத்தாலுந்தான் வாழ்கிறது. அதற்குப் பிறகு தான் அந்தக் குழந்தையின் சொந்த ஜாதகப்படி வாழ்க்கையின் நன்மைகள் தீமைகள் நிகழும். இனி பாலக்கிரக தோஷத்திற்கு உரிய மந்திர யந்திர சாந்தி முறைகளைக் கவனிப்போம்.

முதல் நாள்-முதல் மாதம்-முதல் ஆண்டு

குழந்தை பிறந்த முதல் நாளிலும், முதல் மாதம் முதல் நாளிலும், முதலாண்டு, முதல் மாதம், முதல் நாளிலும் அந்தக் குழந்தைக்கு எந்த நோய் தோன்றினாலும் அத்தகைய நோய் ஏற்படுவதற்குக் காரணம், அதைப் பேய் அணுகுவதனால்தான். அதனால்தான், அதன் குணம் காரணமாக, குழந்தையின் உடலை வெதுப்பும்; பயந்து மிரளச் செய்யும்; வயிறு கழியும்; கண்கள் சொருகும். உடல் கவுல் நாற்றம் வீசும். இதற்குப் பொரி மாவினால் பாவை செய்து, சந்தனம் தெளித்து, எருக்கம் பூச்சூட்ட வேண்டும். மாலைப் பொழுதில், குழந்தையைத் தாயின் மடியில் வைத்து, அந்தப் பாவைக்கு ஊமத்தை காய் முதலியவற்றை ஓட்டில் வைத்து, 9 காசு வைத்து, எலுமிச்சம்பழம் பலிகொடுத்து குழந்தையின் தலையைச் சுற்றி, ஏற்றி இறக்கி, அதைக் கொண்டு போய் ஊருக்கு வடதிசையில் வைக்க வேண்டும்.

2-ம் நாள் 2-ம் மாதம் 2-ம் ஆண்டு

''இலாகி'' என்னும் பேய், குழந்தையை அணுகும். அதன் குணம், உடல் வெடிக்கும். வியர்வை உண்டாகும். குடித்த பாலைக் கக்கும்; சீறிச்சீறி அழும். உடல்

சீவக்கும். பூனைக் குரலில் அழும். இதற்குச் சாந்தி: மாவால் பாவை செய்து, அதற்குச் செம்பருத்திப் பூச்சூட்ட வேண்டும். ஐந்து வண்ணச் சோறு, அப்பம் 8, தக்காளி ஆகியவற்றை ஒரு புது ஓட்டில் வைக்க வேண்டும். குழந்தையைத் தாயார் மடியில் வைத்து, எலுமிச்சம் பழம் பலியிட்டு, தலையைச் சுற்றி, ஏற்றி இறக்கிக் கொண்டு போய், பிடாரி கோவில் சந்தியில் வைக்க வேண்டும். சூரிய சக்கரம்.

3-ம் நாள் 3-ம் மாதம் 3-ம் ஆண்டு

'பண்டசகி' என்னும் பேய் குழந்தையை அணுகும். அதன் குணம், வயிறு கழியும்; கண் விழிக்காது; கண்கள் குழி விழும்; கண் சுழற்றும்; பல்லைக் கடிக்கும்; தலையைப் புரட்டும்; பாலுண்ணாது; கழுத்து நீண்டு விரைப்பாக இருக்கும். விக்கல் அதிகமாகும்; மாவு போலக் கழியும்; உடலை முறுக்கிக் கொண்டு வீறிட்டு அழும். இதற்குச் சாந்தி: மாவால் பாவை செய்து, அதற்குப் பலவகையான மலர்களைச் சூட்டி, ஓட்டில் வைக்க வேண்டும். அதற்கு உளுந்தஞ் சோறும் வேர்க்கடலையும் பொரியும் சாந்தும் சந்தனமும் புனுகும் மாமிசமும் 9 காசும் சுற்றி வைத்து, குழந்தையைத் தாயின் மடியில் வைத்து, எலுமிச்சம் பழம் பலி கொடுத்து சுற்றிப் போட்டு, கழிப்பை தலையைச் சுற்றி ஏற்றி இறக்கி ஊருக்கு வெளியே கிழக்குத் திசையில் வைத்துவிட்டு வரவும். நோய் குணமாகும்.

4-நாள் 4-ம் மாதம் 4ம் ஆண்டு

இப்போது காலாக்கினி என்னும் பேய் குழந்தையை அணுகும். அதன் குணம்: வயிறு பொருமும், கழிச்சல்

அதிகமாகும். கண்கள் குழிவிழுந்து பள்ளமாகும். தாய்ப் பால் அருந்தாது. அருந்திய உணவைக் கக்கிவிடும். இதற்குச் சாந்தி: மாவினால் பாவை செய்து, பஞ்ச வண்ணப் பூச் சூட்டி, ஓட்டில் வைக்க வேண்டும். அதற்கு ஐந்து வண்ணச் சோறும் பணியாரமும் பாக்கும் வெற்றிலையும் 9 காசும் வைக்க வேண்டும். தாயாரின் மடியில் குழந்தையை படுக்க வைத்து, எலுமிச்சம் பழம் பலி கொடுத்து, தலையைச் சுற்றி ஏற்றி இறக்கி, ஊருக்கு வடக்கே ஆலையடியில் வைக்கவும். பிள்ளையாருக்கும் பொங்கலிடவும்.

5-ம் நாள் 5-ம் மாதம் 5-ஆண்டு

'பநாத்ரி' என்ற பேய், குழந்தையை அணுகும். உடல் வெப்பமும் வெதுப்பும் அடையும். பல வண்ணமாகக் கழியும். காலையும் மாலையும் முறுக்கிக் கொண்டு அழும். மாவு போலக் கழியும். தூங்குவதுபோல பார்க்கும். மிரள மிரள விழிக்கும். தாய்ப்பால் அருந்தாது. இதற்கு சாந்தி பரிகாரம்: பருப்புச் சோறும், கருப்பங்கட்டி, ரொட்டி, புண்ணாக்குக் கீரை, கருவாடு, ஆடை, 9 காசு, பாவை ஆகியவற்றையும் ஓட்டில் வைக்க வேண்டும். குழந்தையை தாய் மடியில் வைத்து, எலுமிச்சம் பழம் பலி கொடுத்து, தலையைச் சுற்றி ஏற்றி இறக்கி நாற்சந்தியில் வைக்க, இந்தத் தோஷம் விலகும்.

6-ம் நாள் 6-மாதம் 6-ஆண்டு

'காறாசக்தி' என்னும் பேய் அணுகும். அதன் குணம் வயிறு சிவக்கக் கழியும். மூக்கு நீவியிருக்கும். பல்லும் நெற்றியும் வியர்க்கும். தாய்ப்பால் அருந்தாது. கழுத்து துவளும். பல்லைக் கடிக்கும். பலவிதமாக அழும். இதற்குச் சாந்தி பரிகாரம்; மாப்பாவைச் செய்து, அதனோடு

வெறும் சோறு, கருவாடு, பொரி, சந்தனம், 9 காசு ஆகியவற்றை ஒரு புது ஓட்டில் இட வேண்டும். குழந்தையைத் தாயின் மடியில் வைத்து எலுமிச்சம் பழம் பலி கொடுத்து தலையைச் சுற்றி ஏற்றி இறக்கி ஊருக்குக் கிழக்கே, புற்றின் அடியில் வைக்கவும். சந்தியில் பிள்ளையாருக்கு விளக்கேற்றி வைக்கவும்.

7-ம் நாள் 7-ம் மாதம் 7-ம் ஆண்டு

இப்போது ''சாமுண்டி'' என்னும் பேய் குழந்தையை அணுகும். அதன் குணம்: உடல் வெதும்பி, கண்களில் கண்ணீர் ஒழுகும். குடித்த பாலைக் கக்கும். வாந்தியாகும். தாய்ப்பால் அருந்தாது. உடல் பச்சை நிறமாய் இருக்கும். பல விகாரமான தோற்றத்தை அளிக்கும். கணகளின் இமைகள் வியர்க்கும். கண்கள் மேல் நோக்கிச் சொருகும். குழந்தை வீறிட்டு அழும். இதற்குச் சாந்தி: மாவினால் பாவை செய்து, பலவித மலர்களைச் சூட்டி, அதனோடு பாலும் சோறும் செப்புக் காசும் வைத்து, மாலை நேரத்தில் குழந்தையைத் தாயின் மடியில் வைத்து, எலுமிச்சம் பழம் பலி கொடுத்து, தலையைச் சுற்றி, ஏற்றி இறக்கி, பிள்ளையார் கோயில் முன்பு வைக்கவும்.

8-ம் நாள் 8-ம் மாதம் 8-ம் ஆண்டு

''பராசக்தி'' என்னும் பேய் குழந்தையை அணுகும். இதனால் உடல் வெதும்பி, வியர்வை ஏற்படும். கண் விழிக்காது. கை கால்கள் அசதியடையும். முகத்தைத் துடைக்கும். இடைவிடாமல் அழும். இதற்குச் சாந்தி: மாவினால் பாவை செய்து, அதற்கு ஐந்து வகை மலர்கள் சூட்ட வேண்டும். அதனோடு மஞ்சள் சோறும் 3 கோழி முட்டையும், சாந்து, சந்தனம், 9 செப்புக் காசு, ஆகியவற்றைப் புது ஓட்டிலிட்டு, குழந்தையைத் தாயின் மடியில்

வைத்து; எலுமிச்சம் பழம் பலி கொடுத்து, தலையைச் சுற்றி ஏற்றி இறக்கி ஊருக்கு வடக்கே வைக்கவும். பிள்ளையார் கோயிலில் பூஜை செய்து, ரொட்டி, மாமிசம் ஆகியவற்றை வைத்துத் தெரு சந்தியில் வைக்கவும்.

9-ம் நாள் 9-ம் மாதம் 9-ம் ஆண்டு

''சத்தியமாகி'' என்னும் பேய், குழந்தையை அணுகும். அதன் குணம்: குழந்தைக்கு உடல் வெதும்பும். இரத்தம் கழியும், வயிறு வலிக்கும், குடித்த நீரும் அருந்திய உணவும் வாந்தியாகும். முகத்தை அடிக்கடி துடைக்கும். இதற்குச் சாந்தி, மாவினால் பாவை செய்து அதற்கு மலர்களைச் சூட வேண்டும்; அதனோடு பஞ்சவர்ணச் சோறு, 5 ரொட்டி, 5 பணியாரம், 9 செப்புக்காசு, வெற்றிலை, பாக்கு ஆகியவற்றை ஒரு புது ஓட்டில் வைத்து மாலை நேரத்தில் குழந்தையைத் தாயின் மடியில் வைத்து, எலுமிச்சம்பழம் பலி கொடுத்து, ஆலமரத்தடியில் வைத்து ஐயனாருக்கு பூசை செய்யவும். புனுகு, சந்தனம் ஆகியனவைகளையும் மூன்றெண்ணெய் கூட்டி அதைத் தலைக்குத் தேய்த்துக் குளிப்பாட்டவும்.

10-ம் நாள் 10-ம் மாதம் 10-ம் ஆண்டு

''கலவை'' என்னும் பேய் அணுகும். அதன் குணம்; உடல் வியர்க்கும். வாந்தியாகும். பால் போலக் கழியும். அயர்ந்து கிடக்கும் வயிறு பரியும். மார்பு வாடும். கால் கைகள் வலிக்கும். பலவித விகாரங்கள் தோன்றும். இதற்குச் சாந்தி: மாவினால் பாவை செய்து அதற்குப் பூச் சூட்டவேண்டும். அதனோடு பால், சோறு, நெய் ஆகியவற்றைச் சேர்த்து ஒரு புது ஓட்டில் வைத்து குழந்தையைத் தாய் மடியில் வைத்து, எலுமிச்சம்பழம் பலி கொடுத்து ஊருக்கு வடக்கே கொண்டு போய் வைக்கவும். கீழ்க்காணும் இயந்திரத்தை செப்புத் தகட்டில் எழுதிக் கட்டவும்.



11-ம் நாள் 11-ம் மாதம் 11-ம் ஆண்டு

''சக்தி'' யென்னும் பேய்-குழந்தையை அணுகும். அதன் குணம்: உதடுகள் வறண்டிருக்கும், இரவில் காய்ச்சல் அடிக்கும். விகாரமாகப் பார்க்கும். மேல் மூச்சு வாங்கும். சில சமயம் மூர்ச்சையாகி விடும். இதற்குச் சாந்தி: மண்ணால் பதுமை செய்து, ஆலமரத்தடியில் வைத்து அதற்கு நீல ஆடை கட்டவேண்டும். அதனோடு ஐந்து வர்ணச் சோறும் பொரியும் வாழைப்பழமும் எலுமிச்சம்பழமும் வெல்லமும் மது மாமிசமும் 9 காசும் புது ஓட்டில் வைத்து, குழந்தையைத் தாயின் மடியில் கிடத்தி, தலையைச் சுற்றி ஏற்றி இறக்கி, ஊருக்கு வடக்கே வைக்கவும். கீழேயுள்ள யந்திரத்தை எழுதிக் கட்டவும்.



12-ம் நாள் 12-ம் மாதம் 12-ம் ஆண்டு

''இரதசக்தி'' என்னும் பேய்; குழந்தையை அணுகும் இதன் குணம்: குழந்தை வாந்தியெடுக்கும். வெளுப்பாகக் கழியும். விகாரப் பார்வை பார்க்கும், கண்கள் குழிவிழும் வீறிச் சீறியழும். இதற்கு சாந்தி: மணலில் பாவை செய்து அதை ஆலமரத்தடியில் வைத்து அதற்கு வெள்ளை ஆடை உடுத்த வேண்டும். அதனோடு பருப்புச் சாதம், பாயசம், கோழி, முட்டை, மாவிளக்கு, மாமிசம், ரொட்டி, 9 காசு, அவல், கடலை, சுருட்டு, வடை ஆகியவற்றை ஓட்டிலிட்டு, குழந்தையைத் தாய் மடியில் வைத்துத் தலையைச் சுற்றி ஏற்றி இறக்கி, ஊருக்கு வடக்கே வைத்து விடவும்.

பொதுவான சாந்தி முறை

பாலகிரக தோஷங்களுக்கு பொதுவாக சாந்தி அல்லது கழிப்பு செய்யும் முறை: முதலில் விளக்கேற்றி வைக்க வேண்டும். சாணிப் பிள்ளையாருக்கு அறுகு, மலர்கள் ஆகியன சூட வேண்டும். தாம்பூலம், அவல், கடலை, பழம், தேங்காய், சாம்பிராணி, கற்பூரம், ஊதுவத்தி, 32 செப்புக்காசு ஆகியவற்றை வைக்க வேண்டும்.

ஆண் பெண் பாவை செய்து, அவற்றின் கண்களுக்கு மை பொட்டிட்டு வாயிற் கொஞ்சம் குங்குமம் தூவி, புதுச் சட்டியில் வைக்க வேண்டும். மேலும், காதோலை, கருகு மணி, வளையல், கதம்பப்பொடி, ஆகிய வற்றை வைத்து மாவிளக்கு ஏற்ற வேண்டும். தரையில் சக்கரத்தை, எழுதி, பூஜை நைவேத்தியம் செய்து, தக்க மந்திரம் செபிக்க ஐந்து வண்ணச் சோறு, பஞ்சவர்ண மலர்கள், புண்ணாக்குக் கீரை, கள்ளு, கருவாடு, சாராயம் கரி, ரொட்டி, 5 உண்டை, 5 வடை, சுண்டல், பொரி யாவும் வைக்க வேண்டும்.

அடுத்து, எலுமிச்சம் பழம் 9, ஆற்றுத் தும்மட்டிக்காய், அல்லது ஊமத்தங்காய் 8 அறுத்து, முட்டை, 3 வைத்து, பாவையின் மேல் காசுகளைத் தூவி, எலுமிச்சம்பழம் பலி யிட்டு, குழந்தையின் தலையைச் சுற்றி ஏற்றி இறக்கி கொண்டு போய், வைக்க வேண்டிய இடத்தில் வைத்து விட்டு, அந்தந்த நாள்களுக்குரிய சக்கரங்களை செம்பு அல்லது வெள்ளித் தகட்டில் வரைந்து முன்னமேயே கட்டி விட்டு, மறு நாள் மூன்றெண்ணெய் கூட்டி, தலைக்கு நீர் ஊற்றிக் குளிப்பாட்டவும், சர்வ தோஷங்களும் தீரும். இதற்கு அடையாளம், உச்சியில் பள்ளம் விழும். அதிலும் நிவர்த்தியாக விட்டால், மேலும் இரண்டொரு கழிப்பு செய்யவும். வேறு யந்திரம் கட்டவும்.



இந்தப் பொது யந்திரத்தை செம்பு அல்லது வெள்ளித் தகட்டில் வரைந்து கட்டினால் எல்லா விதமான தோஷங்களும் சர்வ கிரக பீடைகளும் நீங்கும். கர்ப்பம் தரிக்கும். வழக்குகள் வெற்றியடையும். நினைத்த செயல்கள் பலிதமாகும். ஆனால், இதனை, அவரவர்க்குரிய பட்சி ஆட்சி (அரசு செய்யும்) வேளையில் செய்து முடிக்க வேண்டும்.

பாம்பு விஷம் இறங்க

''ஹரி ஓம் ஓங்காளா, அஞ்சலா, இலாவா, சேஷா, முந்திரதீரே, பக்தபஜாரே, விஜாரே, மூலாக்கிரே, சரீர குருவுக்கு ஜகத்திமிரே, பகத்தி புரோ மந்திர மைசூர் வாசா'' இம் மந்திரத்தை 1008 முறைகள் உருவேற்றிச் செபிக்க வேண்டும்.

பாம்பு கடித்தவனை மல்லாக்காகப் படுக்க வைக்க வேண்டும். அவன் முகத்திலிருந்து இடுப்பு வரையில் யந்திர சூலம் போட்டு அவன் நெற்றியில் ந, நெஞ்சினில் சி உந்தியில் ம, என்று எழுதி இலட்சியம் வைக்கவேண்டும் பின்பு, வேப்பிலைக் கொத்தைக் கையில் எடுத்து, உச்சி யிலிருந்து மந்திரித்துக் கொண்டே இறக்க வேண்டும். விஷம் இறக்குபவர் அப்போது பாம்புக்கடி பட்டவனிடத் தில் ஒரு மிளகாயின் முனையைக் கடிக்கச் சொல்வர். அவன் காரமில்லை என்று சொன்னால், விஷம் இறங்க வில்லை என்றும் காரமாய் இருக்கிறது என்றால் விஷ மிறங்கிவிட்டது என்றும் கருதுக. இதற்குப் பிறகு, பச்சரிசி, பச்சைப் பயறு கஞ்சியை அருந்தக் கொடுக்கவும்.

சிசுக்களுக்கு வேப்பிலை அடிக்க

மூன்று கிணற்றுத் தண்ணீரைக் கொண்டு வந்து அதில் விபூதியைத் தூவி, அந்தத் தண்ணீரில் வேப்பிலைக் கொத்தைத் தோய்த்து, ஓம் நமசிவாய என்று 108 முறை ஓதி, குழந்தைகளுக்கு மந்திரிக்க எல்லாத் தோஷமும் நிவர்த்தியாகும்.

எலுமிச்சப்பழம், ஊமத்தங்காய், ஆட்டுத்தும்மட்டி காய் ஆகியவற்றை ஒவ்வொன்றாகக் குழந்தையைச் சுற்றிப் போடவும். இவ்வாறு ஏழு நாள்கள் செய்ய வேண்டும். எட்டாவது நாள் இரவு குழந்தையின் தலை யருகே ஒரு தேங்காயின் குடுமியை உரித்து, துவாரம் செய்து நவதானியம் இட வேண்டும். மூன்று கண்களிலும் கற்பூரம் வைத்துக் கொளுத்தி, குழந்தையைச் சுற்றிக் கழிப்பு எடுத்து, முச்சந்தியில் அந்தத் தேங்காயை உடைக்க வேண்டும். இப்படிச் செய்தால் குழந்தைக்கு ஏற்பட்ட எல்லாத் தோஷங்களும் நிவர்த்தியாகும். பிறகு குழந்தையை எந்தவித நோயும் அணுகாது.

மனோசக்தியை வளர்த்துக் கொள்ள

நம்முடைய மனத்தின் சக்தியை வளர்த்து அதற்கு வலிமை ஊட்டி, ஒரு முனைப்படுத்தி, பிரயோகிக்கும் போது உலகத்தில் சாதிக்க முடியாத காரியமே இல்லை என்று கூறலாம்.

இவ்வாறு மனோசக்தியை வளர்த்துக் கொள்ளும் சாதனையைத்தான் ''ஹிப்னாட்டிசம்'' என்று மேலை நாட்டினர் கூறுகின்றனர்.

இந்த மனோ சக்தியை, (மனோ வசிய சக்தியை) பயன் படுத்தி பிற மனிதரின் அடி மனத்தில் மறைந் திருக்கக் கூடிய உண்மைகளை,—குற்றம் குறைகளை எளி தாக கண்டு பிடித்து விட முடியும்.

ஒரு மனிதன், கொலை, கொள்ளை போன்ற குற்றங் களைச் செய்துவிட்டு எவ்வளவு சாமார்த்தியமாக மனத்திற் குள் மறைத்து வைத்தாலும் மனோவசிய சக்தியின் மூலம் அவன் மறைத்து வைத்திருக்கும் குற்ற உணர்வுகளை வெளிகொண்டு வந்துவிட முடியும்.

காரணம் புரிந்து கொள்ள முடியாத நிலையில் ஒரு மனிதனுக்கு ஏற்பட்டிருக்கும் மன நோயினை மனோவசிய சக்தியின் மூலம் எளிதாகக் குணமாக்கிவிட முடியும்.

பொதுவாக பிற மனிதர்களை நம் வயப்படுத்தி நம் இஷ்டம் போல் ஆட்டிப் படைக்க முடியும்.

இம்மாதிரியான மனோவசிய சக்தியினைப் பெறு வதற்கு மேலை நாட்டினர் எத்தனையோ விதமான மனோ வசிய பயிற்சியினை அளிக்கிறார்கள். அவர்களுடைய முயற்சி முழுமையான அளவுக்கு பலன் தந்ததாக கூறு வதற்கு இல்லை.

நமது நாட்டிலோ இதற்கென உள்ள ஜீவாதார மந்திரத்தை ஜெபித்து மனத்தின் வலிமையை பெருக்கி கொள்ள முடியும்.

இந்த மனோவசிய மந்திரத்தை சூரியன் உதிப்பதற்கு முன்னால் அதிகாலை நேரத்தில் உச்சாடனம் செய்ய வேண்டும்.

அதிகாலையில் நீராடி உடலை சுத்தம் செய்து ஈரத் துணியை இடுப்பில் அணிந்து கொண்டு இஷ்ட தேவதைகளை மனத்தில் நினைத்து வழிபட்ட பிறகு இந்த மந்திரத்தை மனத்திற்குள்ளாகவே உச்சரிக்க வேண்டும்.

இவ்வாறு மந்திர உச்சாடனம் செய்யும்போது மனத்தை அலையவிடாமல் ஒரு நிலையில் நிறுத்த வேண்டியது அவசியம். மனம் ஒரு நிலை படாமல் அலை பாய நேர்ந்தால் மனத்தை அடக்கும் முன்பு மந்திரத்தை ஜெபிக்கக் கூடாது. மனம் அடங்கி ஒரு நிலைபட்ட திருப்தி ஏற்பட்டால் அதன் பிறகே மந்திரத்தை ஜெபிக்க வேண்டும்.

மனோவசிய மந்திரம் வருமாறு:

''நான் இப்பொழுது நானாகவே இருக்கிறேன். இந்த நான் என்ற உணர்ச்சி கடவுள் எனக்களித்து இருக்கும் மனோசக்தியாகும். கடவுளின் ஒத்தாசையால் நான் இப்பொழுது கடவுளாகவே இருக்கிறேன். கடவுள் என் மனத்தை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டு என் உடலால் உள்ளத்தால் என்னை இயக்குகிறார். ஆகவே நான் சக்தி மிக்கவன். என் சக்திக்கு முன்னால் உலகமே துச்சமாக இருக்கிறது. நான் எதை நினைக்கிறேனோ அது நடந்தே தீரும். ஒரு மனிதனை என் விருப்பம் போல என் மனோசக்தியால் ஆட்டிப் படைக்கமுடியும். நான்

எதைச் சொன்னாலும் அது அப்படியே பலிக்கும். நான் என்ன நினைத்தாலும் அது அப்படியே நடக்கும். ஒரு பொருள் நிர்மூலம் ஆக வேண்டும் என்று நான் நினைத்தால் அந்த பொருள் அப்படியே நிர்மூலம் ஆகிவிடும். ஆனால் நான் அப்படி நினைக்க மாட்டேன். ஏன் என்றால் நினைப்பது நானல்ல. கடவுளின் ஆத்ம சக்தி என்னை நினைக்க வைக்கிறது. கடவுள் எதையும்--யாரையும் அழிக்க மாட்டார். நான் கடவுளாகவே இருந்து, கடவுளாகவே சிந்தித்து, கடவுளாகவே செயற்படுவதால் என்னுடைய சொல், செயல், சிந்தனை எல்லாமே மகத்தான சக்தி வாய்ந்தவையாக இருக்கும். கடவுள் என் உள்ளிருந்து இயக்குவதால் என்னால் எதையுமே சாதிக்க முடியும். கடவுள் அருளால் நான் எதையும் சாதிப்பேன்.''

இந்த மந்திரத்தை உச்சாடனம் செய்யும் பொழுது இரு புருவங்களுக்கும் மத்தியில் உள்ள நெற்றிக் கண்ணில் மனத்தை ஊன்ற வேண்டும். சுவாசத்தை வெளிவிடாமல் உள் அடக்கி மனத்தைச் சிதறவிடாமல் தியானிக்க வேண்டும். அப்படி தியானித்துக் கொண்டிருக்கும் பொழுதே அபாரமான சக்தி உங்கள் உடம்பில் தோன்றுவதை உணர முடியும். நம்முடைய உடல் காற்றைவிட இலேசாகி விட்டது போன்ற உணர்வினை பெறுவோம். நமக்கு உடம்பு என்ற ஒன்று இருக்கிறதா என்ற சந்தேகமே எழக்கூடும்.

அதிகாலையில் இவ்வாறு மந்திர உச்சாடனம் செய்வதோடு இரவில் கூடிய மட்டும் நள்ளிரவில் உலகம் அமைதியாக இருக்கும் நேரத்தில் இந்த மந்திரத்தை திறந்த வெளியில் நின்று உச்சாடனம் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு தடவையும் 100 முறை மந்திர உச்சாடனம் செய்து பிறகு இரண்டு வினாடிகள் ஓய்வு எடுத்துக் கொண்டு, மறுபடியும் 100 முறை மந்திர உச்சாடனம்

செய்ய வேண்டும். இதே மாதிரி இடைவெளி விட்டு ஒவ்வொரு தடவையும் மொத்தமாக 1008 முறை உச்சாடனம் செய்ய வேண்டியது அவசியம்.

இவ்வாறு அதிகாலையில் மட்டுமின்றி, நள்ளிரவிலும் செய்யப்படும் மந்திர உச்சாடனம் முப்பது நாட்கள் வரை தொடர்ச்சியாக நீடிக்க வேண்டும்.

இப்பொழுது நீங்கள் முழுமையான மனோவசிய சக்தியை பெற்று விடுவீர்கள். உங்களால் உலகத்தில் சாதிக்க முடியாத காரியமே உலகத்தில் இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிடும்.

பசு மாடு பால் கறக்காமல் இருந்தால்

சில கறவை மாடுகள் சரியாகப் பால் கறக்காமல் கால்களை உதறி, முட்டித் தள்ளும். அதற்கு இந்த மந்திரத்தைப் பயன்படுத்திப் பயனடையலாம்.

> ''குன்று அதிரப் புலி மேய்த்து குளமதிர நீர் குடித்து, மண்ணதிர மேய்ந்து வருகின்ற காராம் பசுவே, உன்னை உற்றுப் பார்த்தவனின் கண்கள் இரண்டும் பாம்புக் கண்களைப் போல் வெடிக்கவும் ஆளைக் கண்டால் பாலாய்ச் சொரியவும் ஓம் காளி. ஓம் பிடாரி, ஓம் ஓம் மாசிவய''

இவ்வாறு 1008 முறைகள் செபிக்க, மந்திர சித்தி ஏற்படும். பின்பு. கண் திருஷ்டியினால் பால் கறவாமல் முரண்டு செய்யும் மாடுகளைத் துணியால் மந்திரித்து விபூதி போட, அந்தக் கண் திருஷ்டி தோஷம் நீங்கிப் பால் கொடுக்கும். இதைப் போலவே ஆடுகளுக்கும் மந்திரிக்க-கண் திருஷ்டி நீங்கி நன்மை உண்டாகும்.

மாட்டுக்கு ஏற்படும் வெக்கை நோய் தீர

மாட்டுக்கு வெக்கை நோய் ஏற்பட்டு விட்டால் புல்லையோ வைக்கோலையோ பிண்ணாக்கையோ, தின்னாது; தண்ணீர் குடிக்காது; உடையவரையே இடித்துத் தாக்கும். கோரமான சுபாவம் ஏற்படும். அதனைக் குணமாக்க கீழ்க்காணும் மந்திரம் பயன்படும்.

> ''ஓம் மஹாதேவிலும் பரமேஸ்வரி. ஓம் பார்வதி ஓம் லஷ்மி, கொம் போட வந்த கௌமாரி, கோமாரி அழல் வெக்கை, சீத வெக்கை முதலிய எந்தவிதமான நோயானாலும் நான் ஓதிய புல்லோடும் தண்ணீரோடும் போகப் போக சுவாஹா!''

இவ்வாறு பதினாயிரம் முறை இந்த மந்திரத்தை உரு வேற்றிச் செபிக்க, மந்திர சித்தியுண்டாகும். இந்த மந்திரத்தை வியாதியுள்ள மாடுகளுக்குத் தண்ணீரிலும் புல்லிலும் 108 முறைகள் உருச் செபித்துக் கொடுக்க, வியாதி குணம் அடைந்து நன்மை உண்டாகும். இவ்வாறு நாள்தோறும் 3 முறை செய்யப் பலிதமடையும்.

நினைத்தது நினைத்தவாறு நடக்க

சாதாரணமாக நாம் எண்ணியபடியெல்லாம் எதுவும் நடப்பதில்லை. ''நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்'' என்று சொல்வார்கள். ஒரு செயலை ஒருவர் என்னதான் சரியாக திட்டமிட்டு மிகவும் கனைத்துடன் செயல்படுத்தினாலும் அந்த செயல் பெரிய இடையூறுகளுக்கு உள்ளாகி நடைபெறாமல் போய் விடுவதுண்டு.

சில சமயம் கொஞ்சம் கூட நம்பிக்கை இல்லாமல் ஒரு செயலை செய்ய ஆரம்பிப்போம். அது நிறைவேறும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்காது. நமது முயற்சி பலித்தால் பலிக்கட்டும் பலிக்காவிட்டால் போகட்டும் என்று

எண்ணி அலட்சியமாக செயல்படுவோம். அதனால் நாம் கொஞ்சமும் எதிர்பாராத விதமாக நம்முடைய முயற்சி மகத்தான வெற்றியைப் பெற்று நம்மை பிரமிப்பில் ஆழ்த்திவிடும்.

இவ்வாறு முரண்பட்ட இந்த நிலைக்கு நமது எண்ணங்களில் ஆற்றலில் ஏற்படும் குளறுபாடுகளே காரணமாக அமையும். நம்முடைய மனமானது நல்ல வலிமையுடனும் அசைக்க முடியாத வல்லமையுடனும் நிகழும் போது நாம் நினைத்ததெல்லாம் நடக்கும். நம்முடைய மனம் வலிமை இழந்து கிடக்கும் போது முயற்சிகளை என்னதான் பக்க பலத்துடன் துவக்கினாலும் அது தோல்வியில் சென்றுதான் முடியும்.

நமது எண்ணம் போல எல்லாமே சரியாக நடப்பதற்கு நம்முடைய மனவலிமையைப் பெருக்கிக் கொள்ள உதவும் மந்திரத்தை மாகாளி மந்திரம் என்று கூறுவார்கள்.

இந்த மந்திரத்தை முறைப்படி உருவேற்றி ஜெபித்து பூர்த்தி செய்தால் நமது எண்ணங்கள் வலிமை பெற்றவை ஆகி மகத்தான பேராற்றலை நாம் அடைவோம். இந்த பேராற்றலின் காரணமாக நாம் நினைத்ததெல்லாம் வெற்றி பெறும்.

இந்த மாகாளி மந்திரத்தை தியானிக்கும் போது மாகாளி இயந்திரம் ஒன்றையும் காரீயத் தகட்டில் எழுதி பூஜையில் வைக்க வேண்டும்.

மாகாளி மந்திரம் வருமாறு:

''ஓம் காளி மகா காளி, ருத்திரகாளி, ஏக சொருபமாக நின்ற காளி, எங்கும் நிறைந்த காளி கனகசபை யானை கால்கடுக்க ஆடவைத்த காளி

அனந்த கோடி உருத்திர முகமான காளி, இரத்த சாமுண்டி. சதாசிவ காளி, பரமேஸ்வரி காளி, கபால கரத்தோனின் உருவில் பாதியாய் நிறைந்த காளி திரிசூலி, மகாகாளி, ஓங்கார காளி, ஆங்காரக் காளி.



"அக்கினிக் கொழுந்தைப் போல ஆகாயம் வரை ஒளிவீசும் காளி, அனந்த கோடி முகங்களும் அனந்த கோடி உறங்காத முகங்களும் அனந்த கோடி ஜடைகளும் விரித்து உக்கிரமான முகத்துடனே வந்து மாற்றான் மந்திரவாதிகள் வளர விட்டபாம்பு, பில்லி, சூனியம், பூதப் பிசாசு இவற்றையெல்லாம் உன்னுடைய திரிசூலத்தால் குத்திப் பாசத்தால் கட்டு

கட்டு, முட்டு முட்டு அடி அடி. இடி இடி இடி, பிடி பிடி பிரு, முறி முறி முறி அண்டங்களையெல்லாம் காத்து ரட்சிப்பவளே, அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியே.

''திரிசூலி, இரட்சி இரட்சி, இரணகளக் காளி, அகில உலகையும் நீ நினைத்தால் வாழவும் செய் வாய். அழியவும் செய்வாய், திரிசூல நாயகியே, கங்காளியே வா வா சுவாஹா''.

இவ்வாறு பத்தாயிரம் முறை உருவேற்றிச் செபிக்க, மந்திர சித்தியாகும். தீபம் ஏற்றி வைத்து தூபமிட்டு, தேங்காய் பழம், தாம்பூலம், மாவிளக்கு முதலியவற்றை வைத்து, நைவேத்தியம் செய்து, தூபதீபங் கொடுத்து குங்கும அர்ச்சனை செய்து பூசிக்க வேண்டும்.

காளி பூஜை யந்திரத்தை காரீயத் தகட்டில் எழுதி, தேங்காய்ப் பழம் மாவிளக்கு, வடை, பாயாசம், வெற் றிலை பாக்கு முதலியவற்றை வைத்து, ஒரு மண்டலம் (45 நாட்கள்) பூஜை செய்ய வேண்டும்.

இதற்கு மூலமந்திரம் :

''ஓம் ஹ்ரீங் ஐயுங் கிலியும் சௌவ்வும் அகோர காளி. வா வா நசி மசி வா வா'' என்று ஓர் இலட்சம் உருவேற்றிச் செபிக்கச் சித்தியாகும்.

மந்திரங்கள் பலிக்குமா?

இந்த நவீன யுகத்தில் மந்திரங்களைப் பற்றி பேச் செடுத்தாலே பலருக்கு அது கேலிக்கு உரிய விஷயமாக இருக்கும். மந்திரங்களாவது பலிப்பதாவது, இதெல்லாம் பத்தாம் பசலித்தன்மையான ஏமாற்று வேலை என நினைப்பவர்கள் அதிகமாக உண்டு.

இவர்களுடைய வினாக்களுக்கு விடையளிப்பது வீண்வேலை. ஏன் எனில் இவர்கள் மந்திரங்களைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்புவதும் இல்லை. இதுபற்றி ஆராய்ச்சி செய்யவும் ஆர்வம் காண்பிப்பது இல்லை. மந்திரங்களை பற்றி ஒன்றுமே தெரிந்து கொள்ளாத நிலையில் அது தவறு, மோசடி என்று வாதிப்பவர்களுக்கு எவ்வாறு விளக்கம் அளிக்க முடியும். ஆகவே அதை விடுக்கிறோம்.

மந்திரங்கள் என்பவை ஆழ்ந்த கருத்துக்களை உள்ளடக்கிய சக்தி மிக்க சொற்கள் ஆகும். மந்திரங்களின் முழு பொருளையும் விளங்கிக் கொள்ளாமலேகூட நம்பிக்கையுடனும் பக்தி சிரத்தையுடனும் அதை உச்சாடனம் செய்யும்போது எண்ணங்கள் வலிமையடைகின்றன. ஒரு மகத்தான சக்தி எண்ணங்களுக்கு ஏற்பட்டு விடுகிறது.

அந்த நிலையில் நாம் எதை சாதிக்க விரும்புகிறோமோ அந்த சாதனை எண்ணங்களின் துணையால் நமக்கு கைவசமாகிறது.

கடவுள் மீது ஆழ்ந்த பக்தி உள்ளவர்களும் மந்திரங்களின் மீது திடமான நம்பிக்கை உடையவர்களும் இந்த மந்திரங்களை உச்சாடனம் செய்வதின் மூலம் நிச்சயமாக நல்ல பலன்களை அடைய முடியும் என்பது மட்டும் உறுதி.

□□□

சங்கடங்கள் அகற்றி மனச்சாந்தியளிக்கும் மந்திரங்கள்



கே.எஸ். பதஞ்சலி ஐயர்

நர்மதா